खस, स्त्री० வெட்டிவேர்

खसकना, अ० நழுவ; விட்டுப் போக

खसकाना, स० விலக்க

खसखस, स्त्री० கசகசா

खसखसा, वि० உலர்ந்ததும், பொடியாகும் குணமும் உடைய (crisp)

ख़सम, पु० கணவன்; எஜமானன்; விரோதி

ख़सरा, पु० தினசரிக் கணக்குப் புஸ்தகம் (ஒழுங்காய் ரகம் வாரியாய்ப் பிரிக்காதது); கர்ணத்தின் நில ஜாப்தா

ख़सलत, स्त्री० இயற்கை; சுபாவம்; பழக்கம்

खसाना, स० விழச் செய்ய

ख़सिया, वि० விதை யடிக்கப்பட்ட; நபும்சகமான पु० வெள்ளாட்டுக் கடா

खसी, पु० வெள்ளாட்டுக் கடா

ख़सोटना, स० பிருண்ட; பிடுங்க

खस्ता, वि० दे० खसखसा

खस्सी, पु० दे० खसी

खाखर, वि० துவாரமுள்ள

खांग, पु० முள்

खाँचा, पु० கொடி, மிலாறு முதலியவையால் செய்யப்பட்ட கூடை; கூடு; கோழிக்கூடு स्त्री० **खांची**

खांड़, स्त्री० சர்க்கரை

खांडना, स० முறிக்க; மெல்ல

खाँड़ा, पु० வாள்; பாகம்

खाँसना, अ० இரும

खाँसी, स्त्री० இருமல்; இருமல் நோய்

खाई, स्त्री० அகழி

खाऊ, वि० போஜனப் பிரியமுள்ள

खाक, स्त्री० தூள்; சாம்பல்; **—उड़ाना** நாசமாக்க; **—चाहना** வணக்கமாயிருக்க; **—छानना** காரியமின்றி அதிக முயற்சியெடுத்துக் கொள்ள; **—सिर पर उड़ाना** துக்கப்பட

खाकसार, वि० அகம்பாவ மில்லாத; மிக எளிய (அடியார்க்கடியான் என்பது போல் தன்னைப் பற்றித் தாழ்மையுடன் சொல்லுவது)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ख़ाका, पु० சட்டம் (framework); திட்டக் குறிப்பு

खाकी, वि० காக்கி நிறமான (khaki)

खाज, स्त्री० खुजली சொறி சிரங்கு

खाजा, पु० சாப்பிடக் கூடிய பண்டம், ஒரு விதத் தின்பண்டம்

खाट, स्त्री० கட்டில்

खाड़ी, स्त्री० விரி குடா

खात, पु० தோண்டுதல்; குளம்; பள்ளம்

खातमा, पु० முடிவு; சாவு

खाता, पु० பேரேடு; கணக்கு (head of account)

खातिर, स्त्री० மரியாதை अ० ஆக (for) (उ० आपके खातिर)

खातिरजमा, स्त्री० நம்பிக்கை

खातिरदारी, खातिरी, } स्त्री० மரியாதை; உபசாரம்

खातिर-तवाज़ा, स्त्री० உபசரிப்பு; வரவேற்பு

ख़ातून, (துருக்கி) स्त्री० महिला பெரிய குடும்பத்து ஸ்திரீ

खाद, स्त्री० எரு; உரம்

खादन, पु० போஜனம்

खादर, पु० தாழ்ந்த பூமி

खादिम, पु० தொண்டன்

खाद्य, वि० சாப்பிடத் தகுந்த

खान, पु० போஜனம் स्त्री० சுரங்கம்

खान, पु० தலைவன்; பட்டாணியர்களில் ஒரு பட்டம் (ख़ाँ)

ख़ानख़ाना, पु० தலைவர்களுக்குத் தலைவன்

ख़ानगी, वि० வீட்டுச் சம்பந்தமான स्त्री० அற்ப வேசி

ख़ानदान, पु० வம்சம்; குடும்பம்

ख़ानदानी, वि० உயர் குலத்து; பூர்வீகமான

खान-पान, पु० அன்னபானாதிகள்; சாப்பிடுதல்

खानम, स्त्री० பெரிய குடும்பத்து ஸ்திரீ

खानसामा, पु० உக்கிராணச் சேவகன்; சமையற்காரன்

खाना, स० சாப்பிட पु० சாப்பாடு

ख़ाना, पु० வீடு;—तलाशी (போலீசார்) வீடு சோதனை;—दारी இல்லறம்;—बदोश வீடு வாசலில்லாத —शुमारी ஜனத்தொகை கணக்கிடுதல்;—नशीन உத்தியோகத்திலிருந்து விலகினவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ख़ाना-जगी, स्त्री० உள் நாட்டுக் கலகம்

ख़ानापुरी, स्त्री० பட்டங்களில் அல்லது கட்டங்களில் குறிப்பிட்ட இடத்தில் வார்த்தை அல்லது எண் எழுதுதல்

ख़ाम, पु० கடிதத்தின் உறை (கவர்) वि० கெட்ட

ख़ाम-खयाली, स्त्री० வீண் யோசனைகள்

ख़ाम ख़ाह, क्रि० दे० ख्वाह-मख्वाह

ख़ामी, स्त्री० பக்குவமில்லாமை; தோஷம்; கெடுதல்

ख़ामोश, वि० பேசாமல்; சத்தமில்லாமல்

ख़ामोशी, स्त्री० சத்தமின்மை; மௌனம்

ख़ार, पु० முள்; பொறுமை; —खाना பொறுமைப்பட

ख़ारा, वि० உப்பான पु० வலைப்பை

ख़ारिज, वि० வெளியேற்றப்பட்ட; தள்ளிவிடப்பட்ட; தனியான

ख़ारिश, स्त्री० சொறி சிரங்கு

खारी, वि० உப்பான

खाल, स्त्री० தோல்; தாழ்ந்த நிலம்

ख़ालसा, சீக்கிய ஜாதியாரின் ஒரு விசேஷ சபை

खाला, वि० தாழ்ந்த

खाला, स्त्री० मौसी தாயாரின் சகோதரி

ख़ालिक़, पु० கடவுள்

खालिस, वि० சுத்தமான

ख़ाली, वि० காலியான; क्रि० மாத்திரம்

खालू, சிற்றப்பா அல்லது பெரியப்பா (தாய்வழி)

ख़ाविंद, पु० கணவன்; எஜமானன்

ख़ास, वि० முக்கியமான; சொந்தமான; விசேஷமான

ख़ासकर, क्रि० முக்கியமாய்

ख़ासदान, पु० வெற்றிலை பாக்குப் பெட்டி

ख़ासबरदार, पु० அரசனின் முன்னால் செல்லும் சிப்பாய்

ख़ास-व-आम, वि० பொதுஜன சம்பந்தமான

ख़ासा, वि० நல்ல; அழகான; நிரம்பிய; மேன்மை தங்கிய. पु० விருந்துச் சாப்பாடு; மெல்லிய மஸ்லின் துணி

ख़ासियत, स्त्री० சுபாவம்; விசேஷ குணம்

खिंचना, अ० இழுக்கப்பட; விரக்தியடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

खिंचाव, पु० இழுக்கப்படுதல்; ஆகர்ஷணம்

खिचड़ी, स्त्री० பொங்கல்; பல பதார்த்தங்கள் கலந்த வஸ்து वि० கலந்த

खिजलाना, अ० கோபமடைய स० கோபமூட்ட

खिजलाहट, स्त्री० கோபம்

ख़िज़ां, स्त्री० இலையுதிர்காலம்; தாழ்மை ஏற்படும் காலம்

ख़िज़ाब, पु० நரைமயிர்ச் சாயம்

खिझाना, स० खिजाना கோபமுண்டாக்க

ख़िड़की, स्त्री० ஜன்னல்

ख़िताब, पु० பதவி; பெருமை

ख़िदमत, स्त्री० सेवा சேவை; தொண்டு

ख़िदमतगार, पु० தொண்டன்

खिन्न, वि० மனமுடைந்த; வருத்தமடைந்த

ख़िरदमंद, वि० புத்தியுள்ள

ख़िराज, पु० வரி

ख़िलअत, स्त्री० ராஜாவால் சன்மானமாகக் கொடுக்கப்பட்ட பதவி அல்லது வஸ்து

ख़िलक़त, स्त्री० உலகம்; சிருஷ்டி; மனிதசமூகம்

खिलखिलाना, अ० உரக்கச் சிரிக்க

खिलना, अ० மலர; சந்தோஷப்பட

खिलवत, स्त्री० ஏகாந்தம்; தனிமை

खिलवाड़, पु० दे० खेलवाड़

खिलाड़ी, पु० விளையாடுபவன் वि० விளையாட்டுத்தனமான

खिलाना, स० விளையாடச் செய்ய; சாப்பிடச் செய்ய; மலரச் செய்ய

ख़िलाफ़, वि० எதிரான; விரோதமான

ख़िलाफ़त, स्त्री० கலீபாவின் பதவி

खिलौना, पु० விளையாட்டுக் கருவி; பொம்மை

ख़िल्क़त, स्त्री० दे० ख़िलक़त

ख़िल्ली, स्त्री० சிரிப்பு; வெற்றிலை பீடா

खिसकना, अ० दे० खसकना

ख़िसारा पु० நஷ்டம்; கெடுதி

खिसियाना, अ० வெட்கப்பட; கோபப்பட

खींच-तान, खींचातानी स्त्री० விரோதம்; எதிர்ப்பு

खींचना, स० இழுக்க; வரைய

खीजना, अ० துன்பமடைய; கோபமடைய

खीर, स्त्री० பாயஸம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

खीरा, पु० வெள்ளிரிக்காய்; கக்கரிக்காய்

खील, स्त्री० பொரி

खीली, स्त्री० வெற்றிலை பீடா

खीस, स्त्री० கோபம்; வெட்கம்

खीसा, पु० பெரிய பை; ஜேபி

खुक्ख, वि० காலியான

खुखड़ी, स्त्री० கூர்க்க சிப்பாய்களின் வளைந்த கத்தி

खुगीर, पु० ஜேணம்

खुगीर की भर्ती, पु० உபயோகமில்லாத வஸ்துக்களின் சேமிப்பு

खुजलाना, अ० அரிக்க स० சொறிய

खुजली, स्त्री० खुजलाहट அரிப்பு; சொறி சிரங்கு

खुजाना, दे० खुजलाना

खुटकना, स० முனையை ஒடிக்க

खुटचाली, वि० துஷ்ட; கெட்ட நடத்தையுள்ள

खुटाई, पु० தோஷம்; விஷமம்

ख़ुतबा, पु० புகழ்ச்சி; கட்டியங் கூறுதல்

ख़ुतूत, पु० கடிதங்கள்

ख़ुद, वि० தானே

ख़ुदकुशी, स्त्री० தற்கொலை

ख़ुदगरज़, वि० சுயநல முள்ள

ख़ुद-ब-ख़ुद, क्रि० தானாகவே

ख़ुदना, क्रि० தோண்டப்பட

ख़ुदपरस्त, वि० சுயநலமுள்ள

ख़ुदमुख्तार, वि० சுதந்திரமுள்ள

ख़ुदरा, पु० சில்லரைச் சாமான்கள்; —**फ़रोश** சில்லரை வியாபாரி

ख़ुदसर, वि० சுதந்திரமுள்ள

ख़ुदा, पु० கடவுள்

ख़ुदाई, स्त्री० ஈசுவரத் தன்மை; சிருஷ்டி

खुदाई, स्त्री० வெட்டுதல்; வெட்டும் காரியம்; வெட்டுக் கூலி

ख़ुदा-दाद वि० கடவுளால் கொடுக்கப்பட்ட

ख़ुदावंद, पु० கடவுள்; எஜமானன்; ஸ்வாமி

ख़ुदा हाफ़िज़, पु० கடவுள் காக்கட்டும் (good-bye)

ख़ुदी, पु० அகங்காரம்

खुद्दी, स्त्री० குருணை

ख़ुनकी, स्त्री० குளிர்ச்சி

ख़ुनस, स्त्री० கோபம்

ख़ुनसी, वि० கோபமுள்ள

ख़ुफ़िया, वि० ரகசியமான

खुभना, स० குத்த

खुमान, वि० சிரஞ்ஜீவியான; ஆயுஷ்மானான

खुमार, **खुमारी** } குடி வெறி; இரவில் விழித்ததால் ஏற்பட்ட களைப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

खुर, पु० குளம்பு

खुरखुरा, वि० கரடு முரடான

खुरचन, स्त्री० தருவி எடுத்த வஸ்து

खुरचना, स० துருவ (தேங்காய் முதலியன)

खुरजी, स्त्री० பெரிய பை

खुरदा, पु० खुर्दा

खुरपा, पु० புல் வெட்டும் ஆயுதம்

खुरमा, पु० பேரீச்சம் பழம்; ஒருவித மிட்டாய்

ख़ुरशैद, पु० சூரியன்

ख़ुराक, स्त्री० உணவு

ख़ुराकी, स्त्री० சாப்பாட்டுக்காகக் கொடுக்கப்படும் பணம்

ख़ुराफ़ात, स्त्री० சச்சரவு; திட்டுதல்

ख़ुर्द, वि० சிறிய

ख़ुर्दबीन, स्त्री० சிறு வஸ்துக்களை பெரியதாகக் காட்டும் யந்திரம் (microscope)

ख़ुर्दबुर्द, पु० நஷ்டம்; பணநாசம்

खुर्दा, पु० खुदरा சில்லரைச் சாமான்

खुर्राट वि० வயதான; அநுபவமுள்ள

खुलना, अ० திறக்கப்பட; புறப்பட; ரகசியம் வெளி வர

ख़ुलासा, वि० வெளிப்படையான; தெளிவான पु० சாராம்சம்

ख़ुल्क, पु० நல்லொழுக்கம்

खुल्लमखुल्ला, क्रि० வெளிப்படையாய்

ख़ुश, वि० சந்தோஷமான

ख़ुशख़बरी, स्त्री० நல்ல சமாசாரம்

ख़ुशख़त, वि० அழகாய் எழுதுகிற पु० அழகான எழுத்து

ख़ुशदिल, वि० எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கும்

ख़ुशनसीब, वि० அதிர்ஷ்டமுள்ள

ख़ुशनवीस, पु० நன்ருய் எழுதுபவன்

ख़ुशनुमा, वि० பார்க்க அழகான

ख़ुशनूदी, स्त्री० சந்தோஷம்

ख़ुशबू, स्त्री० நல்ல வாசனை

ख़ुशमिज़ाज, वि० இனிமையான சுபாவமுள்ள

ख़ुशहाल, वि० சுகமாக; ஐசுவரியமுள்ள

ख़ुशामद, स्त्री० முகஸ்துதி

ख़ुशामदी, वि० முகஸ்துதி செய்யும்;—टट्टू, पु० முகஸ்துதி செய்பவன்

ख़ुशी, स्त्री० சந்தோஷம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ख़ुश्क, वि० உலர்ந்த क्रि० மாத்திரம்

ख़ुश्की, स्त्री० வறட்சி ; தரை

ख़ुसर, पु० மாமனார்

ख़ुसूसन्, क्रि० முக்கியமாக ; விசேஷமாக

खुसूसियत, स्त्री० விசேஷத் தன்மை

ख़ूंखार, वि० பயங்கரமான ; தயையில்லாத

खूँट, पु० நுனி ; ஓரம்

खूँटा, पु० மாடு கட்டும் முளை

खूँदना, अ० குதிக்க ; தாவ

ख़ूँरेजी, स्त्री० ரத்தம் ; சிந்துதல்

ख़ून, पु० ரத்தம் ; கொலை ; —ख़राबी, पु० கொலை

ख़ूनी, वि० கொலை செய்யும் ; கொடூரமான

ख़ूब, वि० உத்தமமான वि० நன்றாய்

ख़ूबसूरत, वि० அழகான

ख़ूबी, स्त्री० நன்மை ; குணம்

खूसट, वि० ஊக்கமில்லாத

खेचर, पु० பக்ஷி

खेड़ा, पु० சிறு கிராமம்

खेत, पु० வயல் ; யுத்தகளம்

खेतिहर, पु० குடியானவன்

खेती, स्त्री० விவசாயம் ; பயிர்

खेती-बारी, स्त्री० விவசாயம்

खेद, पु० துக்கம்

खेदना, स० துரத்த ; பின்தொடர

खेना, स० துடுப்பால் படகு ஓட்ட

खेप, स्त्री० தடவை (நடை)

खेपना, स० நேரம் போக்க

खेम, पु० க்ஷேமம்

खेमा, पु० கூடாரம், டேரா

खेल, पु० விளையாட்டு

खेलना, अ० விளையாட

खेलवाड़, पु० தமாஷ், வேடிக்கை

खेलाड़ी, वि० दे० खिलाड़ी

खेवट, पु० ஓடக்காரன்

खेवा, पु० படகுக் கூலி ; படகேறி நதியைக் கடத்தல் ; தடவை

खेह, स्त्री० தூள்

खैंचना, स० दे० खींचना

खैर, पु० கத்தைக் காம்பு

ख़ैर, अ० நல்லது ; பரவாயில்லை

ख़ैर-आफ़ियत, स्त्री० குசலோபரி

ख़ैरख़ाह, वि० க்ஷேமம் அல்லது நன்மையை விரும்பும்

ख़ैर-मक़दम, पु० स्वागत வரவேற்பு

ख़ैरात, स्त्री० தானம்

ख़ैरियत, स्त्री० க்ஷேமம்

खोंच, स्त्री० சராய்த்தல் ; முள் முதலியவற்றில் சிக்கித் துணி கிழிதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

खोंटना, स० ஏதாவது சாமானின் மேல் பாகத்தை உடைத்தல்
खोंता, पु० பக்ஷிக் கூடு
खोंसना, स० சொருக
खोई, स्त्री० கரும்புச் சக்கை
खोखला, वि० பொந்தான
खोगीर, पु० खुगीर ஜேணம்
खोज, स्त्री० தேடுதல்
खोजना, स० தேட
ख़ोजा, पु० அந்தப்புரத்து நபும்ஸக வேலைக்காரன்
खोट, स्त्री० குற்றம்; தோஷம்
खोटा, वि० தோஷமுள்ள
खोड़रा, பழைய மரத்திலிருக்கும் பெரிய பொந்து
खोदना, स० தோண்ட; செதுக்க
खोदाई, स्त्री० दे० खुदाई
खोना, स० இழக்க
ख़ोनूचा, पु० தெருத் தெருவாய்ப் போய் மிட்டாய் விற்பவன் உபயோகிக்கும் பெரிய தட்டு
खोपड़ा, पु० மண்டையோடு; தலை; கொப்பரை
खोपड़ी, स्त्री० தலை
खोया, पु० திரட்டுப்பால்
ख़ोर, वि० சாப்பிடுகிற [உ-ம் **नशाखोर,** போதை வஸ்து உட்கொள்ளுபவன்; குடிகாரன் **स्त्री०** ஸ்நானம்
खोरा, पु० கிண்ணம்
ख़ोराक, पु० दे० ख़ुराक
खोल, पु० गिलाफ़ உறை; மூடி
खोलना, स० திறக்க
ख़ोली, स्त्री० மூடி
खोह, स्त्री० குகை
ख़ौफ़ पु० பயம்
ख़ौफ़ज़दा, वि० பயந்த
ख़ौफ़नाक, वि० பயங்கரமான
खौर, पु० திலகம்; பொட்டு
खौलना, अ० கொதிக்க
खौलाना, स० கொதிக்க வைக்க
ख्यात, वि० பிரசித்தி பெற்ற
ख्याति, स्त्री० பிரசித்தி
ख़याल, पु० எண்ணம்; நினைவு; தியானம்
ख़याली, वि० கற்பனையின்; விநோதம் செய்கிற
ख्वाजा, पु० எஜமானன்; மேன்மையான; முகம்மதிய சன்னியாசி; அந்தப்புரத்து நபும்ஸக வேலைக்காரன்
ख़्वाब, पु० கனவு
ख़्वाह, अ० அல்லது **वि०** விரும்புகிற; —**म-ख़्वाह** இஷ்டப்பட்டாலும் சரி, படாவிட்டாலும் சரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ख्वाहाँ, वि० விரும்புகிற
ख्वाहिश, स्त्री० इच्छा விருப்பம்

ग

गंग } स्त्री० கங்கை நதி
गंगा }
गंगाल, पु० கங்காளம்
गंगालाभ, पु० மரணம்
गंज, पु० வழுக்கைத் தலை; கடைத்தெரு; குவியல்
गंजन, पु० அவமதிப்பு; கஷ்டம்
गंजा, वि० வழுக்கைத் தலையுள்ள
गंजी, स्त्री० பனியன்; குவியல்
गंजीफ़ा, पु० சதுரங்க ஆட்டம்
गंजेड़ा, वि० கஞ்சா குடிக்கிற
गंठकटा, पु० முடிச்சு மாறி
गंठजोड़ } पु० விவாகத்தில் மணமக்களின் வஸ்திரங்களை முடிதல்
गंठबंधन }
गंड, पु० கன்னம்; முடிச்சு
गंडस्थल, पु० கனபட்டி பொட்டு
गंडा, पु० முடிச்சு; தாயத்து
गंडा तावीज़, पु० மந்திரம்; தாயத்து
गँड़ासा, पु० வைக்கோல், தட்டை முதலியவற்றை வெட்டும் ஆயுதம்
गंडेरी, स्त्री० சிறுகரும்புத் துண்டு
गंदगा, स्त्री० அழுக்கு; அசுத்தம்
गंदला } वि० அழுக்கான; அசுத்தமான
गंदा }
गंदुम, पु० கோதுமை
गंदुमी, वि० கோதுமை நிறமான
गंध, स्त्री० வாசனை
गंधी, पु० வாசனைத் திரவிய வியாபாரி
गंभीर, वि० ஆழமான; அடர்த்தியான; ரகசியமான; கம்பீரமான
गँव, स्त्री० தருணம்
गँवाई, स्त्री० दे० गाँव
गँवारमसला, पु० நாட்டுப்புறப் பேச்சு
गँवाना, स० இழக்க
गँवार, पु० நாட்டுப் புறத்தான்; முட்டாள்
गँवारी, स्त्री० கிராமீயத் தன்மை; முட்டாள்த் தனம்
वि० நாட்டுப் புறத்து
गँवारू, वि० நாட்டுப் புறத்து
गऊ, स्त्री० பசு
गगन, पु० आसमान ஆகாயம்; —चर பக்ஷி
गगरा, पु० குடம்
गच, पु० காங்கிரீட்; காங்கிரீட் தரை; —कारी स्त्री० காங்கிரீட் வேலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गछरंगा, पु० மீன் கொத்திப் பறவை
गज, पु० யானை
गज़, पु० கஜம் (இரண்டு முழம்)
गज़क, पु० ஒருவித எள்ளுருண்டை; சிற்றுண்டி
गज़ब, पु० ஆபத்து; அநியாயம்;—टूटना ஆபத்து நேர;—नाक மிகக் கோபமுள்ள
गजरा, पु० அடர்த்தியாகக் கட்டிய பூமாலை
गज़ल, स्त्री० பார்ஸி உர்து ஜாவளி
गजी, स्त्री० முரட்டுத் துணி
गटकना, स० விழுங்க
गटपट, स्त्री० அதி சிநேகம்
गट्टा, पु० மணிக்கட்டு; ஒரு மிட்டாய்
गट्ठा, पु० விறகுக்கட்டு, புல் கட்டு
गट्ठर, पु० பெரிய மூட்டை
गठन, स्त्री० அமைப்பு
गठना, अ० சௌகர்யமாய் அமைய; அதிக சிநேகம் உண்டாக
गठरी, स्त्री० மூட்டை
गठित वि० சேர்ந்த; அமைந்த
गठिया, स्त्री० சாக்குப் பை; மூட்டை; வாத ரோகம்
गठीला, वि० பல முடிச்சுகள் அடங்கிய; கணுக்களுள்ள; பலமான
गड़, पु० மறைவு; வெளிச்சுவர்
गड़गड़ा, पु० ஒருவித ஹுக்கா
गड़ जाना, अ० வெட்கப்பட
गड़ना, अ० நுழைய; குத்த; புதைக்கப்பட
गड़पना, स० விழுங்க; ஜீர்ணமாக்க
गड़प्पा, पु० பள்ளம்; ஏமாற்றும் இடம்
गड़बड़, पु० ஏற்றத் தாழ்வு; ஒழுங்கின்மை; குழப்பம்; சச்சரவு
गड़बड़ाना, अ० கலந்து போக स० குழப்பம் உண்டாக்க
गड़बड़िया, वि० குழப்பம் உண்டாக்குகிற
गड़बड़ी, स्त्री० दे० गड़बड़
गड़रिया, पु० ஆட்டிடையன்
गड़हा, पु० பள்ளம்
गड़ा, पु० குவியல்
गड़ाना, स० குத்த
गड़ारी, स्त्री० பாத்தி; வட்டமான கோடு
गडुई, स्त्री० கிண்டி
गडुआ, पु० பெரிய கிண்டி
गड़ेरिया, पु० दे० गड़रिया

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गड्डु, पु० அடுக்கு

गड्ढा, पु० பள்ளம்

गढ़ंत, वि० கற்பனை செய்த; இட்டுக் கட்டிய

गढ़, पु० கோட்டை

गढ़न, स्त्री० அமைப்பு

गढ़ना, स० உண்டாக்க; உருவம் கொடுக்க; பொய்க் கதைகள் கட்ட

गढ़ाई, स्त्री० அமைத்தல்; அமைப்புக் கூலி

गढ़ाना, स० அமைக்கச் செய்ய अ० கஷ்டமாகத் தோன்ற

गढ़िया, அமைப்பவன்

गढ़ी, स्त्री० சிறு கோட்டை

गण, पु० கூட்டம்;—पूर्ति, स्त्री० கூட்டங்களுக்கு 'கோரம்' (quorum)

गणक, पु० ஜோசியன்

गणन, पु० எண்ணுதல்; எண்ணிக்கை

गणना, स्त्री० எண்ணிக்கை

गणिका स्त्री० வேசி

गणित, पु० கணக்கு

गण्य, वि० எண்ணக் கூடிய; மரியாதை செய்யத்தக்க

गण्य-मान्य, वि० மரியாதை செய்யத்தக்க; கனவானான

गत, वि० கழிந்த; இல்லாத स्त्री० நிலைமை पु० வாத்தியங்களின் 'கத்'

गतका, पु० சிலம்புத் தடி

गतांक, वि० பிரயோசனமில்லாத पु० பத்திரிகையின் முந்தின இதழ்

गति, स्त्री० நடை; நிலைமை; கதி; எட்டுதல்

गत्ता, पु० அட்டை (card-board)

गत्तालखाता, पु० வசூலிக்க முடியாத கடன் பாபத்து

गद, पु० வியாதி

गदका, पु० गतका, சிலம்புத்தடி, சிலம்பு விளையாட்டு

गदकारा, वि० மிருதுவான

ग़दर, पु० கலகம்

गदराना, अ० பழுக்க ஆரம்பிக்க

गदहपन, पु० முட்டாள்தனம்

गदहा, पु० வைத்தியன்; கழுதை; முட்டாள்

गदाई, वि० அல்பமான; உபயோகமற்ற

गदला, पु० மெத்தை

गद्गद, वि० அதிக அன்பு அல்லது சந்தோஷம் அனுபவிக்கிற

गद्दर, वि० பாதி வெந்த

गद्दा, पु० गदेला மெத்தை

गद्दार, वि० பெரிய துரோகியான; பெரிய கலகக்காரனான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गद्दी, स्त्री० சிறு மெத்தை ; சிங்காசனம்

गद्दी-नशीन, वि० பட்டத்திற்கு வந்த

गद्य, पु० வசன நடை

गधा, पु० கழுதை

ग़नी, पु० மிகப் பெரிய பணக்காரன்

ग़नीम, पु० விரோதி ; கொள்ளைக்காரன்

ग़नीमी युद्ध, पु० கொரில்லாப் போர் முறை

ग़नीमत, स्त्री० லகுவாய்க் கிடைத்த தனம் ; சந்தோஷப்பட வேண்டிய விஷயம்

गन्ना, पु० கரும்பு

गप } स्त्री० வதந்தி ; 'கப்' ;
गप-शप } 'சாடு'

गपकना, स० சட்டென்று விழுங்க

गपड़चौथ, स्त्री० அர்த்தமற்ற பேச்சு

गपोड़ा, पु० பொய்ப் பேச்சு

गप्प, स्त्री० दे० गप

गप्पा, पु० மோசம்

गप्पी, वि० 'சாடு' விடுகிற

गफ्फा, पु० பெரிய கவளம் ; லாபம்

गफ़, वि० அடர்த்தியான

ग़फ़लत, स्त्री० கவனக்குறைவு ; பிசகு

ग़फ़ूर, वि० மன்னிக்கும்

गफ़्फा, पु० பெரிய கவளம் ; லாபம்

ग़फ़्फ़ार, वि० மிக்க தயவுள்ள

ग़बन, पु० ஒப்படைத்த பணத்தை அபகரித்தல்

गबरू, वि० யௌவனமான ; கபடமற்ற

गब्बर, वि० கர்வமுள்ள ; மந்தமான

गम, स्त्री० நுழைதல் ; அடைதல் ; எட்டுதல்

ग़म, पु० துக்கம் ; கவலை

गमक, स्त्री० நல்ல வாசனை पु० மிருதங்கத்தில் 'கமகம்'

गमकना, अ० வாசனையடிக்க

ग़मख़ोर, वि० பொறுமையுள்ள

ग़म-गलत, पु० துக்கத்தைப் போக்கும் காரியம் ; விளையாட்டு ; தமாஷ்

गमगीन, वि० துக்கமுள்ள

गमछा, पु० துண்டு; மேல் துணி

ग़म-ज़दा, वि० துக்கமுள்ள

गमन, पु० போதல் ; வழி

गमला, पु० பூந்தொட்டி

ग़मी, स्त्री० துக்க காலம் ; மரணத்தால் ஏற்பட்ட துக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गम्य, वि० போகத் தகுந்த ; சாத்தியமான

गयंद, पु० பெரிய யானை

गय, पु० யானை

गया-गुज़रा, गया-बीता वि० கெட்ட நிலைமையடைந்த, அற்பன்

ग़र, पु० வியாதி ; விஷம்

ग़र, अ० दे० अगर

गरक़, वि० நஷ்டமான ; மூழ்கிய

गर-बाजीगर, पु० வித்தைகாட்டி

गरचे, अ० अगरचे, यद्यपि இருந்த போதிலும்

गरज, स्त्री० கர்ஜனை

ग़रज़, स्त्री० கருத்து ; தேவை ; விருப்பம் क्रि० கடைசியில் ; கருத்து என்ன வென்றால்

गरजना, अ० கர்ஜிக்க

ग़रज़मंद, ग़रजी, गरजू } वि० அவசியமான ; விரும்பிய

गरदन, स्त्री० கழுத்து

गरदनियाँ, स्त्री० 'கல்தா'

गरदा, पु० धूल தூசி

गरब, पु० கர்வம் ; யானையின் மதம்

ग़रब, पु० மேற்கு

गरबीला, वि० கர்வமுள்ள

गरम, वि० சூடான ; தீவிரமான ; ஊக்கம் நிறைந்த

गरमागरम, वि० சூடச் சுட

गरमागरमी, स्त्री० தயாராயிருத்தல் ; வாத விவாதம்

गरमाना, अ० சூடாக ; கோபிக்க स० சூடாக்க

गरमी, स्त्री० சூடு ; தீவிரம் ; கோபம் ; கோடை

गरल, पु० விஷம்

गराँ, वि० भारी கனமான ; அதிக விலையுள்ள

गराड़ा, स्त्री० ராட்டு ; கிணற்று ராட்டினம்

गरानी, स्त्री० கிராக்கி ; வருத்தம் ; கனம்

गरिमा, स्त्री० பெருந்தன்மை ; மஹிமை

गरियार, वि० சோம்பலான

गरिष्ठ, वि० மிகக் கனமான ; சீக்கிரம் ஜீர்ணமாகாத

गरी, स्त्री० கொப்பரை

ग़रीब, वि० எளிய; ஏழையான

ग़रीबपरवर, वि० ஏழைகளை ஆதரிக்கும் (மரியாதைச் சொல்)

ग़रीबी, स्त्री० தரித்திரம் ; எளிமை

गरीयस, वि० மகத்துவமான

गरु, गरुआ } वि० கனமான ; கௌரவமுள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गरुआई, स्त्री० பெருந்தன்மை
गरू, वि० கனமான
ग़रूर, पु० கர்வம்
ग़रूरी, वि० கர்வமுள்ள
गरेबान, पु० சட்டைக் கழுத்து
गरेरना, स० சூழ
गरोह, पु० கூட்டம்
ग़र्क़, वि० மூழ்கிய ; சிந்தனையி லாழ்ந்த
गर्ज, स्त्री० दे० गरज
गर्जन, पु० கர்ஜ்ஜனை
गर्जना, अ० दे० गरजना
गर्द, स्त्री० தூசி ;—खोर,—खोरा, पु० காலைத் துடைக்கும் பாய்
गर्दभ, पु० கழுதை
गर्दिश, स्त्री० சுற்றுதல்; விபத்து
गर्भित, वि० நிறைந்த
गर्व, पु० கர்வம் ; அகங்காரம்
गर्वी / गर्वीला } वि० கர்வங் கொண்ட
गर्हण, पु० நிந்தை
गर्हित, वि० நிந்திக்கப் பட்ட
गल, पु० गला கழுத்து
ग़लत, वि० பிசகான ; பொய் யான
ग़लतनामा, पु० பிழைத் திருத்தம்
ग़लत-फ़हमी, स्त्री० பிரமை ; தப் பெண்ணம்
ग़लती, स्त्री० பிசகு

गलन', अ० உருக ; கரைய ; வீணாக
गलफांसी, स्त्री० கழுத்துச் சுருக்கு ; பந்தனம்
गलफूला, वि० கன்னங்கள் உப் பிய
गलबांही, स्त्री० கழுத்தில் கை போட்டுக் கொள்ளுதல்
गलमुच्छा, पु० கிருதா
गला, पु० கழுத்து ; குரல்; —बैठना தொண்டை கட்ட; गले पड़ना, गले का हार होना விடாமல் பின் தொடர
गलाना, स० உருக்க ; கரைக்க ; நஷ்டமாக்க
गलित, वि० கரைந்த ; விழுந்து போன
गलिया, पु० சண்டி மாடு
गली, स्त्री० சந்து
ग़लीचा, पु० ஜமக்காளம் ; கம் பளம்
ग़लीज़, वि० गंदा அழுக்கான. पु० குப்பை கூளம்
गलेबाज़ वि० நல்ல குரலுள்ள
गल्प, स्त्री० தற்புகழ்ச்சி ; சிறு கதை
गल्ला, पु० இரைச்சல்; கூட்டம்
ग़ल्ला, पु० விளைச்சல் ; தானி யம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गवँ, स्त्री० பிரயோஜனம் ;—से சமயம் பார்த்து

गवन, पु० புறப்படுதல் ; சாந்தி முகூர்த்தம்

गवाक्ष, पु० சிறு ஜன்னல்

गवारा, वि० பிரியமான

गवाह, पु० சாக்ஷி

गवाही, स्त्री० சாக்ஷியம்

गवेषण, स्त्री० खोज தேடுதல் ; ஆராய்தல்

गवेषी, वि० தேடுகிற

गवैया, पु० பாடகன்

गव्य, वि० பசுவிலிருந்து உண்டான (பஞ்ச கவ்யம்)

ग़श, पु० மூர்ச்சை

ग़श्त, पु० உலாவுதல்

ग़श्ती, वि० உலாவுகிற ;—चिट्ठी சுற்றறிக்கை

गसीला, वि० சேர்க்கப்பட்ட ; அடர்த்தியான

गस्सा, पु० கவளம்

गह, स्त्री० பிடிப்பு ; கைப்பிடி

गहगहा, वि० சந்தோஷமான

गहगहाना, अ० சந்தோஷத்தால் பூரிக்க

गहन, वि० தோரணையான ; கடக்கக் கஷ்டமான पु० ஆழம்

गहना, पु० நகை स० பிடிக்க

गहनी, स्त्री० பிடிவாதம்

गहर, स्त्री० நேரம்

गहरना, स० நேரமாக்க

गहरा, वि० ஆழமான ; கம்பீரமான

गहवारा, पु० पालना தொட்டில்

गहेला, वि० பிடிவாதம் கொண்ட ; முட்டாளான

गह्वर, पु० இருண்ட மறைவான இடம் ; வளை

गांज, पु० குவியல்

गांजना, स० குவியலாக்க

गांजा पु० கஞ்சா

गांठ, स्त्री० கணு ; முடிச்சு ; மூட்டை ;—देना, बांधना, लगाना ஞாபகத்தில் வைத்துக்கொள்ள ;—का சொந்தமான ;—का पूरा ஐசுவரியமுள்ள ;—पड़ना மனஸ்தாபம் உண்டாக

गांठगोभी, स्त्री० நூக் கோல் என்னும் குளிர் நாட்டுக் கிழங்கு

गंठाना, स० முடி போட ; சேர்க்க

गांडर, स्त्री० ஒருவித அருகம் புல்

गांडा, पु० கரும்புத் துண்டு

गाँव, पु० கிராமம்

गाँस, स्त्री० விரோதம் ; முடிச்சு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गाँसना, स० குத்த

गाँसी, स्त्री० அம்பு அல்லது ஈட்டியின் முனை

गागर } स्त्री० **गगरी** பானை
गागरी }

गाछ, पु० செடி

गाज, स्त्री० சத்தம்; மின்னல் पु० நுரை

गाजना, अ० கர்ஜிக்க; சந்தோஷப்பட

गाजर, स्त्री० சீமை முள்ளங்கி (carrot)

गाजा-बाजा, पु० பல வாத்தியங்கள்

ग़ाज़ी, पु० மதத்திற்காக யுத்தம் செய்யும் (முகம்மதிய) வீரன்

गाड़, स्त्री० பள்ளம்

गाड़ना, स० புதைக்க

गाड़र, स्त्री० செம்மறி யாடு

गाड़ी, स्त्री० வண்டி

गाढ़, वि० அதிகமான; அடர்த்தியான; கஷ்டமான; ஆழமான पु० சங்கடம்

गाढ़ा, वि० அடர்த்தியான; கெட்டியான पु०முரட்டுத் துணி

गात, पु० சரீரம்

गात्र, पु० அங்கம்

गाथा, स्त्री० ஸ்துதி; கதை

गाद, स्त्री० கெட்டியான வஸ்து; கசண்டு

गादा, पु० பாதி பழுத்த தானியம்

गाध, वि० ஆழமில்லாத

गान, पु० பாட்டு

गाना, स० பாட पु० பாட்டு

ग़ाफ़िल, वि० बेख़बर கவனமில்லாத

गाभा, पु० துளிர்

गाभिन } वि० கர்ப்பமான
गाभिनी }

गाम, पु० गाँव கிராமம்

गामी, वि० போகிற

गाय, स्त्री० பசு; கபடமற்றவன்

गायक, पु० பாடகன்

गायन, पु० பாட்டு; பாடகன்

गायब, वि० மறைந்த

गायबाना, क्रि० மறைவில்; ஆள் எதிரே இல்லாத போது

ग़ार, पु० ஆழமான குழி; குகை

ग़ारत, वि० நஷ்டமான स्त्री० கொள்ளை

गारद, स्त्री० காவல் சிப்பாய்கள் (guards)

गारना, स० பிழிய

गारा, पु० காரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गारी, स्त्री० दे० ग़ाली

गाल, पु० கன்னம் ;—बजाना தற்புகழ்ச்சி பேச

ग़ालिब, वि० विजयी ஜயிக்கும்

ग़ालिबन, क्रि० அநேகமாய் ; சம்பவிக்கக்கூடியதாய்

गाली, स्त्री० திட்டு

गाली-गलौज़ } पु० பரஸ்பர நிந்தனை
गाली-गुफ़ता }

गालू, वि० அதிகமாய்ப் பேசுகிற

गाव, पु० பசு ;—कुशी பசுவைக் கொல்லுதல்

गाव-तकिया, पु० பெரிய தலையணை

गावदी वि० முட்டாளான

गावदुम, वि० அடி பெருத்து நுனி சிறுத்த

गाह, पु० வாடிக்கைக்காரன் ; பிடிப்பு

गाह, स्त्री० இடம் ; சமயம்

गाहक, पु० வாங்குபவன் ; மரியாதை செய்பவன்

गाहकी, स्त्री० बिक्री விற்பனை

गाहन, पु० ஸ்நானம்

गाहना, अ० மூழ்கி ஆழம் பார்க்க ; தானியத்தை சூடு மிதிக்க

गाह-बगाह, क्रि० दे० गाहे- बगाहे

गाहा, स्त्री० கதை

गाहो, स्त्री० ஐந்து கொண்ட ஒரு கூறு

गाहे-ब-गाहे, क्रि० कभी कभी எப்பொழுதாவது

गिंजना, अ० கலக்கப்பட

गिचपिच } वि० தெளிவில்லாத
गिचिरपिचिर }

ग़िज़ा, स्त्री० போஜனம் ; சாப்பிடக்கூடிய வஸ்து

गिटपिट, स्त्री० அர்த்த மற்ற பேச்சு அல்லது சத்தம்

गिड़गिड़ाना, वि० கெஞ்ச

गिद्ध, पु० கழுகு

गिनती, स्त्री० எண்ணிக்கை

गिनना, स० எண்ண ; கணக்கிட

गिनाना, स० எண்ணுவிக்க

गिनी } स्त्री० கினீ என்னும் தங்க நாணயம் (guinea)
गिन्नी }

गिरगिट, पु० ஓணான்

गिरजा, पु० மாதா கோவில்

गिरदा, पु० சுற்று ; சுற்றளவு

गिरना, अ० விழ

गिरफ्त, स्त्री० பிடிக்கப் படுதல்

गिरफ़्तार, वि० கைது செய்யப்பட்ட

गिरफ़्तारी, स्त्री० கைதியாதல்

गिरमिट, पु० பெரிய தமூர் (auger)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गिरवी, स्त्री० रेहन அடகு வைத்தல்

गिरह, स्त्री० கணு; முடிச்சு; வீசம் கஜம்;—कट முடிச்சவிக்கி

गिराँ, वि० दे० गराँ

गिरा, स्त्री० வாக் சக்தி; ஸரஸ்வதி

गिराना, स० வீழ்த்த; தள்ள

गिरानी, स्त्री० महँगा கிராக்கி

गिरि, पु० மலை

गिरी, वि० அடகு வைத்த

गिर्द, क्रि० அக்கம் பக்கத்தில்

गिर्दावर, पु० அலைபவன்

गिल, स्त्री० காரை; சாந்து

गिलकारी, स्त्री० மணியாசு செய்தல்

गिलट, पु० வெள்ளி போன்ற ஒரு மலிவான தாது

गिलटा, स्त्री० நெறி

गिलटी, स्त्री० கட்டி (gland, a hard swelling, tumour)

गिलबिलाना, अ० முணங்குதல்

गिलना, स० விழுங்க; மனதில் அடக்கிக் கொண்டிருக்க

गिलम, स्त्री० மெத்தை वि० மெதுவான

गिलहरी, स्त्री० அணில்

गिला, पु० புகார்; இகழ்ச்சி

गिलाफ़, पु० உறை; கூடு; ரஜாயி

गिलावा, पु० காரை; சாந்து

गिलास, पु० டம்ளர்

गिलौरी, स्त्री० வெற்றிலை பீடா

गिल्टी, स्त्री० दे० गिलटी

गींजना, स० கசக்கிப் பாழாக்க

गीत, पु० பாட்டு

गीति, स्त्री० பாட்டு

गीदड़, पु० நரி; பயங்காளி;—भबकी போலி தைரியப் பேச்சு

गीदी, वि० பயங்காளியான

गीबत, स्त्री० ஆஜரில்லாமை; கோள் சொல்லுதல்

गीर, स्त्री० वाणी வாக்கு

गीला, वि० நனைந்த

गुंचा, पु० कली மொட்டு

गुंज }
गुंजन } स्त्री० ரீங்காரம்

गुंजना }
गुंजरना } अ० ரீங்காரம் செய்ய

गुंजा, स्त्री० குந்து மணிக் கொடி

गुंजाइश, स्त्री० உள் அடங்கியிருக்க இடம்; அவகாசம்

गुंजान, वि० அடர்த்தியான

गुंजार, पु० ரீங்காரம்

गुंडा, वि० போக்கிரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुंथना, अ० கோக்கப்பட; தொடுக்கப்பட

गुंफ़, पु० சிக்கல்; கொத்து

गुंफ़न, पु० சிக்கலாதல்

गुंबज़ } पु० கும்மட்டம்
गुंबद } போன்ற சிகரம் (dome)

गुंबा, पु० सूजन புடைத்தல்; வீக்கம்

गुंभी, स्त्री० अंकुर முளை

गुइयाँ, पु० தோழன் स्त्री० தோழி

गुच्ची, स्त्री० கோலி அல்லது கிட்டிப்புள் ஆட்டத்தின் குழி

गुच्छ
गुच्छक } पु० கொத்து
गुच्छा

गुच्छेदार, वि० கொத்தாயிருக்கும்

गुज़र, पु० நிர்வாகம்; உற்பத்தி ஸ்தானம்; பிரவேசம்;—बसर ஜீவனம்

गुज़रना, अ० கழிய; கடந்து செல்ல; வாழ் நாள் கழிய; இறக்க

गुज़रान, पु० दे० गुज़र

गुजरिया, स्त्री० இடைச்சி, கோபிகாஸ்திரீ

गुज़श्ता, वि० கழிந்த

गुज़ारना, स० கழிக்க

गुज़ारा, पु० வாழ்க்கை; ஜீவனம்சம்

गुज़ारिश, स्त्री० प्रार्थना வேண்டுகோள்

गुझिया, स्त्री० சோமாசி

गुटकना, स० விழுங்க पु० புறுவின் சத்தம்

गुटका, पु० சிறு புஸ்தகம்

गुटिका, स्त्री० மாத்திரை, குளிகை

गुट्ट, पु० சேர்க்கை

गुठली, स्त्री० பழக்கொட்டை

गुड़, पु० வெல்லம்

गुड़गुड़ाना, अ० குடுகுடு என்று சத்தம் செய்ய; ஹுக்கா குடிக்க

गुड़गुड़ी, स्त्री० ஒருவித ஹுக்கா

गुड़िया, स्त्री० பொம்மை

गुड़ी, स्त्री० காற்றுடி

गुड्डा, पु० பெரிய காற்றுடி

गुड्डी, स्त्री० காற்றுடி

गुण, पु० குணம்; கயிறு;—गाना புகழ

गुणक, पु० பெருக்கும் எண்

गुणकारक } वि० பயன் தரும்
गुणकारी }

गुणज्ञ, वि० பிறர் குணத்தை அறிந்து கொள்ளும்

गुणन, पु० பெருக்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुणना, स० பெருக்க
गुणांक, पु० பெருக்கப் படும் எண்
गुणा, पु० ज़रब பெருக்கல்
गुणाढ्य, वि० குணவானுன
गुणी, पु० குணவான்; நிபுணன்
गुत्थम-गुत्था, पु० சிக்கல்; போராட்டம்
गुत्थी, स्त्री० முடிச்சு; சிக்கல்
गुथना, अ० கோக்கப்பட
गुदगुदा, वि० சதை நிறைந்த; மிருதுவான
गुदगुदाना, अ० கிசுகிசு மூட்ட
गुदगुदी, स्त्री० கிசு கிசு
गुदड़ी स्त्री० கந்தை
गुदना, अ० குத்தப்பட
गुदा, पु० மலத்துவாரம்
गुदाज़, वि० பருமனுன; பலமான; மிருதுவான
गुद्दी, पु० பழச்சதை; உள்ளங்கைச் சதை
गुनगुना, वि० दे० कुनकुना
गुनगुनाना, अ० முணு முணுக்க; மூக்கால் பேச
गुनना, स० எண்ண
गुनह, पु० பாவம்; குற்றம்; —गार वि० பாவம் செய்த; குற்றம் செய்த
गुना, पु० மடங்கு

गुनाह, पु० குற்றம்; பாவம்; —गार குற்றம் செய்த; பாவம் செய்த
गुनी, वि० दे० गुणी
गुन्ना, पु० அனுஸ்வாரம்
गुपचुप, क्रि० ரகசியமாய்
गुप्त, वि० மறைந்த; ரகசியமான पु० ஒற்றன்
गुप्तचर, पु० உளவாளி
गुप्ती, स्त्री० வெளியே தெரியாமல் கத்தி சொருகப்பட்ட தடி
गुफ़ा, स्त्री० குகை
गुफ़्तगू, गुफ़्तार स्त्री० बातचीत சம்பாஷணை
गुबरैला, पु० गुबरौता சாணி வண்டு
ग़ुबार, पु० தூசு; மனதில் அடக்கிக் கொண்டிருக்கும் கோபம், வெறுப்பு முதலியன
गुब्बारा, पु० புகைக் கூண்டு (balloon)
गुम, वि० ஒளிந்து கொண்ட; கெட்டுப் போன; இழக்கப்பட்ட; —नाम பிரசித்தி பெருத; —राह வழி தவறிய; கெட்ட நடத்தையுள்ள; —गुमना, —गुम होना நஷ்டமடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुमटा, पु० நெற்றியிலோ மண்டையிலோ மோதுவதால் புடைத்தல்

गुमटी, स्त्री० கோபுரம்; ரயில் கேட்

गुमटीहा, पु० ரயில் கேட்டுக் காரன்

गुमना, अ० காணாமல் போக

गुमनाम, वि० பிரசித்தி பெருத; பெயர் கொடுக்கப்படாத

गुमर, पु० கர்வம்; ரகசியமாய்ப் பேசுதல்

ग़ुमान, पु० கர்வம்

ग़ुमानी, वि० கர்வமுள்ள

गुमाश्ता, पु० ஏஜண்டு

गुम्मा, वि० மிதமாய்ப் பேசுகிற

गुर, पु० யுக்தி; குறுக்கு வழி; ரகசியம்

गुरगा, पु० गुप्तचर உளவாளி; சிஷ்யன்

गुरदा, पु० மூத்திரக்காய்; தைரியம்

ग़ुरबत, स्त्री० அந்நிய நாட்டு வாசம்; பிரயாணம்; தாழ்மை

ग़ुरबा, पु० (ग़रीब का बहु०) ஏழைகள்

गुरिया, स्त्री० மாலையின் மணி

गुरु, पु० ஆசாரியர் वि० கனமான

गुरुआई, स्त्री० குருவின் தொழில்

गुरुजन, पु० பெரியோர்

गुरुता, स्त्री० } கனமான தன்மை; மேன்மை
गुरुत्व, पु० }

गुरुद्वारा, पु० சீக்கியர்களின் கோவில்

गुरुघंटाल, पु० அதி சாமர்த்திய சாலி; போக்கிரி

गुरुमुखी, स्त्री० சீக்கியர் உபயோகிக்கும் எழுத்து

गुरुवार, पु० வியாழன்

गुरू, पु० உபாத்தியாயர்

ग़ुरूब, पु० அஸ்தமனம்

ग़ुरूर, पु० दे० ग़रूर

ग़ुरेज, स्त्री० बचना தப்பித்தல்

गुरेरना, स० உற்று நோக்க

गुर्ज, पु० गदा கதை ஆயுதம்

ग़ुर्राना, अ० உறும

गुल, पु० ரோஜா; புஷ்பம்; —कंद குல்கந்து;—खिलना விசித்திர சம்பவம் நடக்க; —करना விளக்கை அணைக்க

गुल, पु० சத்தம்;—गपाड़ा पु० இரைச்சல்

गुल अब्बास, पु० அந்தி மந்தாரை

गुलकारी, स्त्री० கொடி வேலை

गुलगुल, वि० மிருதுவான

गुलगुला, पु० ஒரு மிட்டாய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुलचीं, पु० பூத்தொடுக்கிற வன்

गुलछर्रा, पु० அநுசிதமான சிற்றின்ப வாழ்க்கை

गुलज़ार, पु० தோட்டம் वि० பசுமையான

गुलदस्ता, पु० பூச்செண்டு

गुलदाउदी, स्त्री० கொத்தாய்ப் பூக்கும் ஒரு செடி

गुलदान, पु० பூக்களைச் சொருகி வைக்கும் பாத்திரம்

गुलनार, पु० மாதுளம் பூ; அதின் சிவப்பு நிறம்

गुल-फ़ाम, पु० ரோஜா நிறமானவன்; மிக அழகானவன்

गुलबदन, पु० ஒருவிதப் பட்டுத் துணி वि० மிக அழகான

गुल-रू, वि० ரோஜா போன்ற முகமுள்ள; மிக அழகான

गुलशन, पु० தோட்டம்

गुलशब्बो, पु० ரஜனீ காந்தப் பூ (night-queen)

गुलाब, पु० ரோஜாப்பூ

गुलाबचांदनी, पु० நந்தியா வட்டை

गुलापाश, पु० பன்னீர்ச் செம்பு

गुलाबी, वि० ரோஜா நிறமான

ग़ुलाम, पु० அடிமை; வேலைக்காரன்

ग़ुलामी, स्त्री० அடிமைத்தனம்

गुलाल, पु० ஹோலிப் பண்டிகையில் ஒருவர் மீது ஒருவர் போட்டுக் கொள்ளும் சிவப்புப் பொடி

गुलिस्ताँ, पु० தோட்டம்

गुलू, पु० கழுத்து; குரல்

गुलूबंद, पु० பனி காலத்தில் தலை, காது, கழுத்து, இவற்றைச் சுற்றிக் கட்டும் துணி (muffler)

गुलेल, स्त्री० பக்ஷி வேட்டையில் மண் உருண்டைகள் எய்யும் வில்

गुलेलचा, पु० பக்ஷி வேடன்

गुलेला, पु० பக்ஷி வேட்டையில் உபயோகமாகும் மண் உருண்டை

गुल्फ़, पु० கணுக்கால்

गुल्म, पु० வயிறு சம்பந்தமான வியாதி

गुल्ली, स्त्री० பழத்தின் கொட்டை; கிட்டிப்புள் விளையாட்டில் 'புள்'

गुल्ली-डंडा, पु० கிட்டிப்புள் விளையாட்டு

गुसाँई, पु० दे० गोसाईं

गुस्ताख़, वि० பெரியோரிடம் மரியாதையற்ற; அதிகப் பிரசங்கியான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुस्ताख़ी, स्त्री० அதிகப் பிரசங்கித்தனம்
ग़ुस्ल, पु० ஸ்நானம் ;—ख़ाना குளிக்கும் அறை
ग़ुस्सा, पु० கோபம்
ग़ुस्सैल, वि० முன்கோபியான
गुहना, स० दे० **गूथना**
गुहराना, स० கூப்பிட
गुहा, स्त्री० குகை
गुहार, स्त्री० அபயக் கூச்சல் ; உதவிக்காகக் கூப்பிடுதல்
गुह्य, वि० மறைந்த ; மறைக்க வேண்டிய ; ரகசியமான
गूँगा, वि० ஊமையான
गूँज, स्त्री० எதிரொலி ; வண்டுகளின் ரீங்காரம்
गूँजना, अ० எதிரொலிக்க ; வண்டுகள் ரீங்காரம் செய்ய
गूँथना, स० दे० **गूथना**
गूँधना, स० தண்ணீரோடு கலந்து மாவு பிசைய
गूजर, पु० மாட்டிடையன்
गूढ़, वि० ரகசியமான ; கடினமான
गूथना, अ० நுழைக்க ; கோக்க ; சேர்க்க ; தைக்க
गूदड़, पु० கந்தை ;—का लाल குப்பையில் கிடக்கும் மாணிக்கம்
गूदा, पु० பழச் சதை
गून, स्त्री० படகு இழுக்கும் வடம்
गूमड़ी, स्त्री० பரு
गूलर, पु० பெரிய உருண்டைப் பழங்களுள்ள ஒரு வகை அத்திமரம்
गृध्र, पु० கழுகு
गृह, पु० வீடு ; குடும்பம்
गृहस्थ, पु० குடும்பஸ்தன்
गृहस्थी, स्त्री० இல்லறம்
गृहिणी, स्त्री० வீட்டின் எஜமானி ; இல்லாள்
गृही, पु० குடும்பஸ்தன்
गेंड़ना, स० வயலுக்குக் கரை கட்ட
गेंडरी, गेंडुरी स्त्री० சும்மாடு, பிரிமணை
गेंडली, स्त्री० பாம்புகள் மண்டலம் போட்டுப் படுத்திருப்பது
गेंड़ा, पु० கரும்பின் தோகை ; கரும்பு
गेंद, स्त्री० பந்து
गेंदा, पु० செண்டுப்பூ
गेंदुवा, पु० தலையணை
गेड़ना, स० சுற்றிக் கோடு போட ; பிரதக்ஷிணம் செய்ய
गेय, वि० பாடத் தகுந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गेरुआ, वि० காஷாய நிறமான
गेरू, स्त्री० காவிக்கல்
गेसू, पु० மயிர்க் கொத்து
गेह, पु० வீடு
गेहनी, स्त्री० இல்லாள்
गेही, पु० குடும்பஸ்தன்
गेहुँअन, पु० நாகப் பாம்பு
गेहुँआ, वि० கோதுமை நிறமான
गेहूँ, पु० கோதுமை
गैंड़ा, पु० காண்டா மிருகம்
ग़ैब, पु० மறைந்து இருத்தல்; புலப்படாமை
ग़ैबी, वि० மறைந்த; அறிமுகமில்லாத
गैया, स्त्री० गाय பசு
ग़ैर, वि० அந்நிய; வேறுபட்ட
ग़ैरत, स्त्री० लज्जा வெட்கம்; நாணம்
ग़ैरमज़रूआ, वि० உழப்படாத
ग़ैरमनक़ूला, वि० ஸ்திரமான; அகற்ற முடியாத
ग़ैरमुमकिन, वि० அசம்பவமான
ग़ैरवाजिब, वि० யோக்கியதை இல்லாத
ग़ैरहाज़िर, वि० ஆஜரில்லாத; முன்னிலையிலில்லாத
गैरिक, पु० காவி; பொன்
गैल, स्त्री० रास्ता வழி

गोंठना, स० நாலா புறமும் சூழ
गोंड़ा, पु० வேலி போட்ட இடம்; சிறு கிராமம்
गोंद, पु० கோந்து
गो, स्त्री० गाय பசு; இந்திரியம் वि० இருந்த போதிலும் पु० சொல்பவன்
गोइंदा, पु० துப்பறிபவன்
गोइयाँ, पु० தோழன் स्त्री० தோழி
गोखरू, पु० நெரிஞ்சி முள்; கால் ஆணி
गोखा, पु० झरोखा பலகணி
गोचर, पु० புலன்களால் அறியக் கூடிய; மேய்ச்சல் தரை
गोज़, पु० அபான வாயு
गोजर, पु० பூரான்
गोझा, पु० ஒருவித மிட்டாய்; சட்டைப் பை
गोट } स्त्री० வஸ்திரத்தின்
गोटा } கரையில் தைக்கும் ஒருவித நாடா
गोटी, स्त्री० பாண்டி முதலிய விளையாட்டுக்களில் உபயோகப்படுத்தும் சில்லு
गोठ, स्त्री० பசுவின் கொட்டில்
गोड़इत, पु० தலையாரி
गोड़ना, स० தோண்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गोड़ा, पु० கட்டில், நாற்காலி, மேஜை முதலியவைகளின் கால்

गोड़िया, स्त्री० சிறுகால்

गोत, पु० குலம்; கூட்டம்

ग़ोता, पु० மூழ்குதல்;—ख़ोर மூழ்குபவன்;—खाना மூழ்க; ஏமாற

गोद, स्त्री० மடி; ஆலிங்கனம்; ஸ்வீகாரம்

गोदना, स० குத்த; பச்சை குத்த

गोदाम, पु० கிடங்கு (go-down)

गोदी, स्त्री० दे० गोद

गोधूम, पु० गेहूँ கோதுமை

गोधूलि } **गोधूली** } पु० மாடுகள் தூசு கிளப்பிக் கொண்டு வரும் மாலை நேரம்

गोन } **गोनी** } स्त्री० கோணிப்பை

गोप, पु० மாட்டிடையன்

गोपन, पु० மறைத்தல்; காப்பாற்றுதல்

गोपनीय, वि० மறைக்கத் தகுந்த

गोपी, स्त्री० இடைச்சி

गोफ़ा, पु० இலை மொட்டு

गोबर, पु० சாணம்;—गणेश முட்டாள்

गोबरी, स्त्री० எரு; வரட்டி

गोभी, स्त्री० கோசுக்கீரை

गोया, क्रि० मानों போல

गोर, स्त्री० சமாதி

गोरखधंधा, पु० சிக்கலான வேலை

गोरज, पु० மாட்டுத் தூசு

गोरस, पु० பால், தயிர் முதலியவை; சிற்றின்பம்

गोरा, वि० வெண்ணிறமான; அழகான पु० ஐரோப்பியன்

गोरू, पु० பசு; மிருகம்

गोलंदाज, पु० பீரங்கி சுடுபவன்

गोलंबर, पु० கோபுரம்; வட்டம்

गोल, वि० வட்டமான; உருண்டையான

ग़ोल, पु० கூட்டம்

गोलक, पु० சோரபுத்திரன்; உண்டியல் பெட்டி

गोलमाल, पु० சீர் கேடு

गोलमिर्च, स्त्री० மிளகு

गोला, पु० பெரிய உருண்டை; பீரங்கிக் குண்டு

गोलाकार } **गोलाकृति** } वि० வட்ட வடிவமான; உருண்டை வடிவமான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गोली, स्त्री० உருண்டையான, மாத்திரை ; கோலி ; துப்பாக்கி வெடி

गोश, पु० காது ; – **माली** காது திமிண்டுதல்

गोशवारा, पु० கூட்டுத் தொகை; சுருக்க வரவு செலவு விவரம்

गोशा, पु० கோடி ; மூலை ; தனிமையான இடம்

गोशाला, स्त्री० மாட்டுக் கொட்டில், பசுமடம்

गोश्त, पु० மாமிசம் ;—**ख्वार** மாமிசம் உண்ணும்

गोष्ठ, पु० பசுக்கொட்டம் ; ஆலோசனை ; கூட்டம்

गोष्ठी, स्त्री० சபை ; சம்பாஷணை ; ஆலோசனை

गोसाईं } **गोस्वामी** } पु० ஒரு வித சந்நியாசி

गोह, स्त्री० உடும்பு

गोहरा, पु० சாணி எரு

गोहराना, अ० கூப்பிட

गोहार, स्त्री० கூப்பிடுதல் ; சத்தம்

गौं, स्त्री० அனுகூலமான சமயம் ; பிரயோஜனம்

गौंगीर, वि० சுய நலமான

गौ, स्त्री० பசு

गौख, स्त्री० ஜன்னல்

ग़ौग़ा, पु० இரைச்சல் ; வதந்தி

गौण, वि० முக்கியமில்லாத

गौना, पु० சாந்தி முகூர்த்தம்

गौर, वि० दे० **गोरा**

ग़ौर, पु० கவனம் ; யோசனை ; —**तलब**, वि० ஆலோசிக்கத் தக்க

गौरैया, स्त्री० சிட்டுக் குருவி

गौहर, पु० முத்து ; இயற்கை குணம் ; விசேஷ குணம்

ग्रंथ, पु० நூல் (புஸ்தகம்)

ग्रंथन, पु० சேர்த்தல் ; கோத்தல்

ग्रंथि, स्त्री० முடிச்சு

ग्रंथित, वि० கோக்கப்பட்ட

ग्रंथिबंधन, पु० மணமக்களின் வஸ்திரங்களை முடிதல்

ग्रसन, पु० பிடித்தல் ; விழுங்குதல்

ग्रसना, स० வலிவுடன் பிடிக்க ; துன்புறுத்த

ग्रस्त, वि० பிடிக்கப்பட்ட ; பீடிக்கப்பட்ட

ग्रामणी, पु० கிராமத் தலைவன் ; முக்கியஸ்தன்

ग्रामीण } **ग्राम्य** } वि० கிராம சம்பந்தமான

ग्रास, पु० கவளம் ; பிடி ; கிரஹணம் பிடித்தல்

ग्राह, पु० முதலை ; பிடித்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ग्राहक, पुं० விலைக்கு வாங்கு பவன்

ग्राही, पुं० வாங்குபவன்; விரும்புபவன்

ग्राह्य, वि० வாங்கத் தகுந்த

ग्रीवा, स्त्री० गला கழுத்து

ग्रीष्म, स्त्री० கோடை காலம்; உஷ்ணம்

ग्लानि, स्त्री० துக்கம்

ग्वार, स्त्री० கொத்தவரை

ग्वाल, ग्वाला पुं० மாட்டிடையன்

ग्वालिन, स्त्री० இடைச்சி

घ

घंघोलना, स० ஜலத்தைக் கலக்க

घंट, पुं० பானை

घंटा, पुं० மணி (bell; hour)

घंटिका, स्त्री० சிறிய மணி; சிலம்பு; உள் நாக்கு

घंटी, स्त्री० சிறிய மணி

घट, पुं० பானை; சரீரம் वि० குறைந்த

घटक, पुं० மத்தியஸ்தன்

घटती, स्त्री० குறைவு

घटना, अ० குறைய स्त्री० நிகழ்ச்சி; சம்பவம்

घटबढ़, स्त्री० ஏற்றத் தாழ்வு

घटवार, पुं० ஓடக்காரன்; துறைவரி வசூல் செய் பவன்

घटा, स्त्री० மேகம்

घटाटोप, पुं० மேகங்கள் சூழ் தல்; பல்லக்குத் துணி

घटाना, स० குறைக்க

घटाव, पुं० குறைவு; கழித்தல்

घटिका, स्त्री० சிறு பானை; கணுக் கால்; ஒரு நாழிகை

घटित, वि० செய்யப் பட்ட; நடந்த

घटिया, वि० மட்ட ரகமான; வலிவான

घटिहा, वि० சமயம் பார்த்துத் தன் காரியத்தைச் சாதித் துக் கொள்ளுகிற

घटी, स्त्री० குறைவு; நஷ்டம்; ஒரு நாழிகை

घट्टा, पुं० உராய்வதால் தோலில் உண்டாகும் காய்ப்பு

घड़ा, पुं० பானை

घड़िया, स्त्री० சிறு பானை; செப்பு

घड़ियाल, पुं० பூஜை மணி; முதலை

घड़ी, स्त्री० சமயம்; நாழிகை; கடிகாரம்;—साज़ கடிகா ரம் ரிப்பேர் செய்பவன்

घन, पुं० மேகம்; பெரிய சம் மட்டி.; கூட்டம்; கன அளவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

घनघोर, पु० பயங்கரமான சத்தம் वि० ஆழமான
घनचक्कर, पु० முட்டாள்; வீணைத் திரிபவன்
घनफल, पु० கன அளவு
घनमूल, पु० கன மூலம் (cube root)
घनश्याम, पु० கருமேகம்; ஸ்ரீ கிருஷ்ணன்
घनसार, पु० கற்பூரம்
घना, वि० அடர்ந்த; பக்கத்திலிருக்கும்
घनात्मक, वि० நீளம், அகலம், உயரம் சமமாயுள்ள
घनिष्ठ, वि० கெட்டியான; நெருங்கிய
घने, वि० कई அநேக
घपला, पु० ஒழுங்கின்மை
घबराना, अ० மனம் கலங்க स० கலக்க; அவசரப் படுத்த
घबराहट, स्त्री० பயம்
घमंड, पु० கர்வம்
घमंडी, वि० கர்வமுள்ள
घमकना, अ० கர்ஜிக்க
घमका, पु० அடிக்கும் சத்தம்
घमर, पु० டங்கா, டமாரம் முதலியவற்றின் சத்தம்
घमसान, पु० பயங்கர யுத்தம்
घमाना, अ० குளிர் காய
घमासान, पु० दे० घमसान
घमोय, स्त्री० நாய் வேளை; நாய்க் கடுகு
घर, पु० வீடு; இருப்பிடம்; —आबाद करना மணக்க; —बसाना மணக்க
घरघराना, अ० உறுமுதல்
घरघालन, वि० குடியைக் கெடுக்கும்
घरजाया, पु० வீட்டு அடிமை
घरद्वार, पु० வீடு வாசல்
घरनी, स्त्री० இல்லாள்
घरफोरी, स्त्री० குடும்பத்தில் கலகம் உண்டாக்குபவள்
घरबार, पु० வீடு வாசல்; சொத்து
घरबारी, पु० குடும்பஸ்தன்
घराना, पु० வம்சம்
घरी, स्त्री० மடிப்பு; அடுக்கு
घरू, वि० வீட்டு
घरेलू, वि० பழக்கப்பட்ட; வீட்டு
घरैया, वि० குடும்பத்துடன் நெருங்கிப் பழகிய
घरौंदा } पु० பொம்மை வீடு
घरुआ }
घर्राटा, पु० खुर्राटा; குரட்டை
घर्षण, पु० உரைதல்
घलुआ, पु० கொசறு
घसना, अ० घिसना தேய
घसियारा, पु० புல் வெட்டுபவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

घसीट, स्त्री० வேக வேகமாய் எழுதுதல்; அவசரத்தில் எழுதப்பட்ட விஷயம்

घसीटना, स० தரையோடு இழுக்க; கிறுக்க

घहराना, अ० கர்ஜிக்க

घांटी, स्त्री० குரல்வளை; தொண்டை

घाई, स्त्री० இரண்டு விரல்கள் கூடுமிடம்; காயம்; ஏமாற்றம்

घाएँ, क्रि० तरफ़ பக்கமாய்

घाघ, पु० பக்காப் போக்கிரி

घाघरा, पु० பாவாடை

घाट, पु० ஆற்றுத் துறை; கணவாய்

घाटा, पु० குறைவு; நஷ்டம்

घाटी, स्त्री० கணவாய்

घात, पु० அடி; தீமை स्त्री० கபடம்

घातक, पु० கொலையாளி

घातिनी, स्त्री० கொலை செய்பவள்

घाती, पु० கொலை செய்பவன்

घान, पु० } செக்கு அல்லது
घानी, स्त्री० } இயந்திரத்தில் ஒரு தடவை போடக் கூடிய அளவு

घाम, पु० வெயில்

घाय, पु० दे० घाव

घायल, वि० காயப் பட்ட

घालक, पु० கொல்பவன்; அழிப்பவன்

घालना, स० அழிக்க; கெடுக்க

घाव, पु० காயம்

घास, स्त्री० புல்

घिग्घी, स्त्री० விக்கல்; பயத்தால் தொண்டை அடைத்தல்

घिघियाना, अ० கொஞ்ச; திக்கித் திக்கிப் பேச

घिन, स्त्री० घृणा வெறுப்பு

घिनाना, अ० வெறுக்க

घिन्नी, स्त्री० दे० घिरनी

घिया, स्त्री० कद्दू சுரைக்காய்

घिरना, अ० சூழப்பட

घिरनी, स्त्री० ராட்டினம்; சக்கரம்

घिराव, स्त्री० சூழ்தல்; சூழப்படுதல்; சுற்று; சுற்றளவு

घिसघिस, स्त्री० காரியம் செய்வதில் தளர்ச்சி; நிச்சயமில்லாமை

घिसना, स० உரைக்க; தேய்க்க अ० தேய

घिसाई, स्त्री० தேய்தல்; தேய்ப்புக் கூலி

घिस्सा, पु० மோதுதல்

घी, पु० நெய்

घुइयां, स्त्री० अरवी சேப்பங்கிழங்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

घुँघनी, स्त्री० சுண்டல்
घुँघराले, वि० சுருண்ட
घुँघरू, पु० சலங்கை மணி; சிலம்பு
घुंडी, स्त्री० துணிப் பொத்தான்
घुग्घू, पु० ஆந்தை
घुटकना, स० விழுங்க; 'கிடக், கிடக்' என்று குடிக்க
घुटना, पु० முழங்கால் अ० மூச்சடைக்க
घुटवाना स० மூச்சடைக்கச் செய்ய; மொட்டை யடிக்க
घुटाना, स० மூச்சடக்கச் செய்ய
घुट्टी, स्त्री० ஜீரணம் ஆவதற்காகக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் மருந்து
घुड़कना, स० மிரட்ட
घुड़की, स्त्री० கோபித்தல்; மிரட்டல்
घुड़दौड़, स्त्री० குதிரைப் பந்தயம்
घुड़सवार पु० குதிரை வீரன்
घुड़साल, स्त्री० குதிரை லாயம்
घुन, पु० அந்துப் பூச்சி
घुनना, अ० பூச்சி அரிக்க
घुन्ना, वि० கோபம் அல்லது வெறுப்பை மனதிலேயே அடக்கிக் கொள்ளும்
घुमक्कड़, वि० அதிகமாய் அலையும்
घुमड़ना, वि० மேகங்கள் திரண்டு வர
घुमराना, अ० கோரமாய் சப்திக்க
घुमाना, स० சுற்ற; அலையச் செய்ய
घुमाव, पु० சுற்றுதல்; அலைதல்;
—दार, वि० சுற்றும்
घुर्मित, क्रि० அலைந்து
घुलना, अ० கரைய; க்ஷீணமடைய
घुलाना, स० கரைக்க
घुसना, अ० பிரவேசிக்க
घुसाना / घुसेड़ना } स० நுழைக்க
घूंघट, पु० முட்டாக்கு
घूंघर, पु० சுருட்டை மயிர்
घूँट, पु० ஒருவாய்ப் பானம்
घूँटना, स० குடிக்க
घूँसा, पु० குத்து
घूमना, अ० அலைய, சுற்ற
घूरना, अ० முறைத்துப் பார்க்க
घूरा, पु० குப்பைக் குவியல்
घूस, स्त्री० பெருச்சாளி; லஞ்சம்
घृणा, स्त्री० வெறுப்பு
घृणित, वि० வெறுக்கத் தக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

घृत, पु० நெய்

घेरना, स० சூழ; ஸ்துதி செய்ய

घेरा, पु० நாற்புறத்து எல்லை; சுற்றளவு; முற்றுகை

घोंघा, पु० நத்தை

घोंटना, स० 'கடக் கடக்' என்று குடிக்க

घोंपना, स० குத்த

घोंसला, पु० பக்ஷிக்கூடு

घोखना, स० மனப் பாடம் செய்ய

घोटना, स० மினு மினுப்புக் காகக் கடைய; பலமுறை செய்து பழக; மூச்சுத் திணறச்செய்ய; அரைக்க पु० அரைக்கும் கல்லுரல்

घोटला, पु० ஒழுங்கின்மை

घोड़साल, स्त्री० दे० घुड़साल

घोड़ा, पु० குதிரை

घोर, वि० பயங்கரமான; கடக்க முடியாத

घोलना, स० கரைக்க

घोष, पु० மாட்டிடையன்; சத்தம்

घोषणा, स्त्री० விளம்பரம்; கர்ஜனை

घौद, पु० பழக் கொத்து

घ्राण, स्त्री० மூக்கு; வாசனை

च

चंग, स्त्री० காற்றாடி; பிடி; வசம்

चंगा, क्रि० நன்றாய்; சௌக்கியமாய்

चंगुल, पु० பக்ஷிகளின் வளைந்த விரல்கள்; பிடிப்பு

चँगेर } चंगेरी } स्त्री० தட்டுக் கூடை; பூக் கூடை

चंचरी, स्त्री० } चंचरीक, पु० } ப்ரமர வண்டு

चंचल, वि० ஸ்திரமில்லாத; பொறுமை யற்ற; விஷமம் செய்யும்

चंचला, स्त्री० மின்னல்

चंचु, स्त्री० चोंच அலகு

चंट, वि० धूर्त தந்திரமான

चंड, वि० தீவிரமான; உக்ரமான पु० சூடு

चंडू, पु० அபின்;—ख़ाना அபின் சாப்பிடும் இடம்;—बाज़ அபின் உபயோகிப்பவன்

चंडूल, पु० மண் நிறமான ஒரு பறவை

चंद, पु० சந்திரன் वि० சில

चंदन, पु० சந்தனம்

चंदला, वि० गंजा வழுக்கைத் தலையுள்ள

चंदवा, पु० ஒருவித மண்டபம்

चंदा, पु० சந்திரன்; சந்தாப் பணம்

चंद्र, पु० சந்திரன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

चंद्रबिंदु, पु० அரை அனுஸ்வாரக் குறி

चंद्रमा, पु० சந்திரன்

चंद्रवार, पु० திங்கள் கிழமை

चंद्रहार, पु० ஒருவித மாலை

चंद्रहास, पु० வாள்

चंद्रिका, स्त्री० நிலா

चंपई, वि० சம்பங்கிப் பூ நிறமான

चंपक, पु० சம்பங்கி

चंपत, वि० ग़ायब மறைந்து

चंपना, अ० சுமையால் அழுத்தப்பட்ட

चंपा, पु० செண்பகம்

चँवर, पु० சாமரம் ;—दार சாமரம் போடும் சேவகன்

चकई, स्त्री० பெண் சக்ரவாகப் பக்ஷி

चकचूर, वि० தூள் தூளான

चकचौंध, स्त्री० திடுக்கிடுதல் ; கண் கூசுதல்

चकत्ती, पु० பேழுசுட்டை

चकनाचूर, वि० தூள் தூளாக

चकपकाना, अ० திடுக்கிட ; ஆச்சரியத்தால் இங்குமங்கும் பார்க்க

चकबन्दी, स्त्री० வயல்களைச் சிறு சிறு பாகமாகப் பிரித்தல்

चकमक, पु० சிக்கிமுக்கிக் கல்

चकमा, पु० धोखा ஏமாற்றம்

चकराना, अ० தலை சுற்ற ; கலங்க ; வியப்படைய

चकला, पु० அப்பளமிடும் பலகை, வ்யபிசாரிகளின் இருப்பிடம்

चकलेदार, पु० ஒரு பிர்க்காவின் அதிகாரி

चकल्लस, स्त्री० வினோதப் பேச்சுக்கள்

चकवा, पु० சக்ரவாகம் என்னும் நீர்ப் பறவை

चकाचक, क्रि० खूब நன்றாய்

चकाचौंध, स्त्री० திடுக்கிடுதல் ; கண் கூசுதல்

चकित, वि० வியப்படைந்த

चकोतरा, पु० நாரத்தை

चकोर, पु० ஒருவிதப் பக்ஷி

चक्कर, पु० வட்டம் ; சுற்று ; —खाना சுழல ;—में डालना சங்கடத்தில் மாட்ட ; —मारना சுற்றிவர

चक्का, पु० சக்கரம் ; வட்டமான துண்டு

चक्की, स्त्री० மாவு அரைக்கும் இயந்திரம்

चक्र, पु० சக்கரம்

चक्रवाक, दे० चकवा

चक्रव्यूह, पु० படையில் ஒருவித அணி வகுப்பு

चक्षु } पु० आँख கண்
चख }

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

चख़ } स्त्री० लड़ाई சண்
चख़-चख़ } டை ; சச்சரவு

चखना, स० ருசி பார்க்க

चखाना, स० ருசி காட்ட

चगड़, वि० சாமர்த்தியமுள்ள

चचा, पु० தகப்பஞரின் சகோதரன்

चचींड़ा, पु० புடலங்காய்

चचेरा, वि० चचा வுக்குப் பிறந்த

चट, क्रि० तुरंत உடனே ; —करना சாப்பிட்டுவிட

चटक, पु० ஒருவிதக் குருவி स्त्री० மினு மினுப்பு ; சுறு சுறுப்பு क्रि० சுறு சுறுப்பாய் त्रि० ருசியான ; காரசாரமான ;—मटक மயக்கும் எண்ணத்துடன் கூடிய சிங்கார நடை

चटकना, स० வெடிக்க ; பிளக்க पु० செவிட்டடி

चटकाना, स० விரல்களைச் சுடக்க

चटकारा, वि० பளபளப்பான ; சஞ்சலமான, ருசியறிந்து நாக்கைச் சப்புக்கொட்டுவது

चटकीला, वि० ஸ்வாரஸ்யமான

चटपट, क्रि० சீக்கிரம்

चटपटा, वि० ஸ்வாரஸ்யமான ; காரசாரமான

चटपटी, स्त्री० துரிதம் ; கலக்கம்

चटशाल } स्त्री० பள்ளிக்
चटसार } கூடம்

चटाई, स्त्री० பாய்

चटापटी, स्त्री० துரிதம்

चटोरा, पु० चट्टू, போஜனப் பிரியன்

चट्टान, स्त्री० பாறை

चट्टी, स्त्री० தங்குமிடம் ; டோரா ; ஸ்லிப்பர் ஜோடு

चट्टू, वि० दे० चटोरा

चढ़ना, अ० ஏற

चढ़ाई, स्त्री० ஏறுதல் ; ஏற்றம் ; படையெடுப்பு

चढ़ा-उतरी, स्त्री० அடிக்கடி ஏறி இறங்குதல்

चढ़ा-ऊपरी } स्त्री० போட்டி
चढ़ाचढ़ी }

चढ़ाना, स० ஏற்ற ; குடிக்க

चढ़ाव, पु० ஏற்றம் ; ஏறுதல்

चढ़ावा, पु० காணிக்கை ; மணமகளுக்குக் கொடுக்கும் நகை

चणक, पु० चना கடலை

चतुरंग, पु० நால் வகைச் சேனை; சதுரங்க விளையாட்டு

चतुर, वि० சாமர்த்தியமுள்ள

चतुराई, स्त्री० சாமர்த்தியம்

चतुर्गुण, वि० நான்கு மடங்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

चतुर्थ, वि० நான்காவது

चतुर्दिक, कि० நாலா பக்கமும்

चतुष्कोण, वि० சதுரமான

चतुष्पद, वि० நான்கு காலுள்ள

चद्दर, स्त्री० துப்பட்டி ; தகடு

चनखना, अ० கோபப்பட

चना, पु० கொண்டைக் கடலை

चपकन, स्त्री० ஒரு வகைக் கோட்டு

चपकना, अ० दे० चिपकना

चपकलश, கத்திச் சண்டை ; இரைச்சல்

चपटा, वि० दे० चिपटा

चपड़ा, पु० லாக்ஷ அரக்கு

चपत, पु० செவுட்டடி ; நஷ்டம்

चपना, अ० அமுக்கப்பட ; நசுக்கப் பட

चपनी, स्त्री० கிண்ணம்

चपरा, क्रि० झटपट சீக்கிரம்

चपरास, स्त्री० சேவகனின் வில்லை

चपरासी, पु० கச்சேரிச் சேவகன்

चपल, वि० சஞ்சலமான ; தந்திரமான ; கெட்டிக் காரனான

चपला, स्त्री० மின்னல்

चपाती, स्त्री० சப்பாத்தி (ரொட்டி)

चपेट, स्त्री० அறை ; பிரபாவம்

चपेटना, स० அமுக்க ; அதட்ட

चप्पल, पु० செருப்பு

चप्पा, पु० கால் பங்கு ; நாலு விரக்கடை

चप्पू, पु० ஓடத்தைத் தள்ளும் தடி

चबाना, स० மெல்ல

चबूतरा, पु० திண்ணை ; மேடை

चबेना, पु० வறுக்கப் பட்ட தானியம்

चबेनी, स्त्री० சிற்றுண்டி

चभोरना, स० நனைக்க

चमक, स्त्री० பிரகாசம் ;—दमक स्त्री० பகட்டு ;—दार மினு மினுப்பான

चमकना, अ० பிரகாசிக்க ; திடீரென வலி யெடுக்க

चमकाना, स० பிரகாசிக்கும் படி செய்ய

चमकीला, वि० பிரகாசிக்கிற ; பகட்டான

चमगीदड़, पु० வௌவால்

चमचम स्त्री० பாலால் செய்த ஒருவித மிட்டாய்

चमचमाना, अ० மினு மினுக்க स० மினு மினுக்கச் செய்ய

चमचा, पु० ஸ்பூன்

चमड़ा, पु० } தோல்
चमड़ी, स्त्री० }

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

चमत्कृत, वि० ஆச்சரியப்பட்ட
चमत्कार, पु० ஆச்சரியகரமான வேலை
चमत्कारी, वि० ஆச்சரியகரமான
चमत्कृत, त्रि० ஆச்சரியப்பட்ட
चमन, पु० பூந்தோட்டம்
चमर, पु० சாமரம்
चमाचम, वि० பிரகாசமுள்ள
चमार, पु० சக்கிலிய ஜாதி; சக்கிலியன்
चमू, स्त्री० சேனை
चमेली स्त्री० மல்லிகை
चमोटा, पु० சாணைத் தோல்
चमोटी, स्त्री० சவுக்கு; சாணைத் தோல்
चम्मच, पु० ஸ்பூன்
चय, पु० குவியல்; கூட்டம்
चयन, पु० பொறுக்கி எடுத்தல்
चर, पु० தூதன்; உளவாளி वि० தானே போகும்
चरक, पु० தூதன்; உளவாளி
चरका, पु० காயம்; ஏமாற்றம்
चरख, पु० வாழைத்தார்
चरखा, पु० ராட்டினம்; சண்டை சச்சரவு
चरखी, स्त्री० சிறிய ராட்டினம்; பெட்டி வாணம்
चरचना, स० மெழுக; பூச
चरचा, स्त्री० दे० चर्चा

चरण, चरन } पु० பாதம்
चरना, अ० மேய
चरनी, स्त्री० மேய்ச்சல் தரை
चरपरा, वि० காரமான; சுறுசுறுப்புள்ள
चरबांक, चरबाक } वि० சாமர்த்தியமுள்ள; பயமற்ற
चरबी, स्त्री० கொழுப்பு
चरम, वि० கடைசி
चरवाहा, पु० மேய்ப்பவன்
चरस, पु० கமலை; லாகிரி வஸ்து
चरसा, पु० பெரிய தோல் பை; கமலை
चरसी, पु० கமலை இழுப்பவன்
चराई, स्त्री० மேய்தல்; மேய்த்தல்; மேய்ச்சல் கூலி
चरागाह, पु० மேய்ச்சல் தரை
चराचर, वि० அசைவன-அசையாவன, ஸ்தாவர-ஜங்கம
चराना, स० மேய்க்க; வார்த்தையாடி ஏமாற்ற
चरिंदा, पु० மிருகம்
चरित, पु० நடத்தை; வாழ்க்கைக் கதை
चरितार्थ, वि० திட்டப்படி நடந்த; பிரயோஜனப்பட்ட
चरत्तर, पु० போக்கிரி நடத்தை
चरित्र, पु० சுபாவம்; செயல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

चरी, स्त्री० மேய்ச்சல் தரை

चरेरा, वि० முரடான

चर्ख़, पु० ஆகாயம்; குயவனின் சக்கரம்

चर्चक, पु० பேசுபவன்; தர்க்கிப்பவன்

चर्चा, स्त्री० பேச்சு; சம்பாஷணை; விவாதம்

चर्चित, वि० கூறப்பட்ட; பூசப்பட்ட

चर्पट, पु० செவுட்டடி; உள்ளங்கை

चर्म, पु० தோல்;—**कार** சக்கிலியன்

चर्या, स्त्री० செய்யப்படும் காரியம்; நியமம்

चर्राना, अ० அரிக்க; வலிக்க; தினவெடுக்க

चल, वि० சஞ்சலமான

चलचलाव, पु० யாத்திரை

चलता, वि० பழக்கத்திலுள்ள; தந்திரமான

चलती, स्त्री० அதிகாரம்

चलन, पु० நடத்தை; போக்கு; பழக்க வழக்கங்கள்;—**सार** பழக்கத்திலுள்ள

चलना, अ० நடக்க; படிக்க முடிய

चलनी, स्त्री० दे० **छलनी**

चलाऊ, वि० வெகு காலம் உழைக்கக்கூடிய

चलाचली, स्त्री० போகிற அவஸரம்

चलान, स्त्री० செல்லுதல்; பணம் செலுத்தும் சலான்

चलाना, स० நடக்கச் செய்ய; போகச் செய்ய; ஓட்ட; அம்பு, குண்டு முதலியவைகள் விட

चलायमान, वि० செல்லுகிற; சஞ்சலமான

चलाव, पु० செல்லுதல்; யாத்திரை

चलावणी, स्त्री० செலாவணி

चलावा, पु० நியமம்

चलित, वि० நடக்கும்; அசையும்

चवन्नी, स्त्री० கால் ரூபாய் நாணயம்

चश्म, स्त्री० கண்;—**दीद** கண்ணால் பார்த்த;—**नुमाई** கண் மிரட்டல்;—**पोशी** குற்றங்களை கவனியாதிருத்தல்

चश्मा, पु० மூக்குக் கண்ணாடி; ஊற்று

चषक, स्त्री० கள் குடிக்கும் பாத்திரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

चसक, स्त्री० இலேசான வலி

चसकना, अ० வலிக்க ; வேதனை எடுக்க

चसका, पु० விருப்பம் ; கெட்ட பழக்கம்

चस्पाँ, वि० ஒட்டியிருக்கும்

चह, पु० படகுத் துறை स्त्री० பள்ளம்

चहक, स्त्री० பக்ஷிகளின் ஆரவாரம்

चहकना, अ० (பக்ஷி) கூவ ; சந்தோஷத்துடன் சம்பாஷிக்க

चहचहा, पु० दे० चहक

चहचहाना, अ० பக்ஷிகள் ஆரவாரம் செய்ய

चहबचा, पु० தொட்டி ; குழி ; நிலவறை

चहल, स्त्री० சேறு ; ஆரவாரம்

चहलक़दमी, स्त्री० நிதானமாய் ; உலாவுதல்

चहलपहल, स्त्री० களிப்பு ; கொண்டாட்டம்

चहला, पु० சேறு

चहार, वि० चार நான்கு

चहारदीवारी, स्त्री० காம்பவுண்டுச் சுவர்

चहार-शम्बा, पु० புதன் கிழமை

चहारुम, वि० கால் பங்கு

चहुँओर, क्रि० நாலா பக்கமும்

चहेता, वि० அன்பான

चाँई, वि० மோசக்கார ; தந்திரமான

चांगला, वि० சொஸ்தமான ; சாமர்த்தியமான

चांटा, पु० செவுட்டடி, அறை

चांड, वि० பலமான ; தீவிரமான स्त्री० சுமை தாங்கி

चांडाल, पु० சண்டாளன்

चांद, पु० சந்திரன்

चांदनी, स्त्री० நிலா ; பந்தலின் உள்பக்கம் கட்டும் வெள்ளைத் துணி

चांदमारी, स्त्री० குறி பார்த்துச் சுடும் அப்பியாசம்

चांदी, स्त्री० வெள்ளி

चांप, स्त्री० அடக்குதல் ; அழுத்துதல்

चांपना, स० அழுத்த

चाँयँचाँयँ, स्त्री० வீண் உளறுதல்

चाक, पु० குயவன் சக்கரம் ; பிளவு वि० திடமான ; தந்திரமான

चाकना, स० எல்லை போட ; அடையாளம் செய்ய

चाकर, पु० வேலைக்காரன்

चाकरी, स्त्री० வேலை

चाक़ू, पु० கத்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

चाचा, पु० काका தகப்பனாரின் சகோதரன்

चाट, स्त्री० விருப்பம்; சுவை; காரசாரமான பண்டம்; கெட்ட வழக்கம்

चाटना, स० நக்க

चाटु, पु० முகஸ்துதி

चाटुकार, पु० முகஸ்துதி செய்பவன்

चाटुकारी, स्त्री० முகஸ்துதி

चातक, पु० சாதக பக்ஷி

चातुरी, स्त्री० } சாமர்த்தியம்
चातुर्य, पु० }

चादर, स्त्री० துப்பட்டி; அகலமான துப்பட்டா; தகடு

चाप, पु० வில்; வட்டத்தில் ஒரு பாகம் (arc)

चापना, स० அமுக்க

चापलूस, वि० முகஸ்துதி செய்யும்

चापलूसी, स्त्री० முகஸ்துதி

चाबना, स० மெல்ல; சாப்பிட

चाबी, स्त्री० சாவி

चाबुक, पु० சவுக்கு, சாட்டை

चाभना, स० சாப்பிட

चाभी, स्त्री० சாவி

बेंड़ी स्त्री० நீர்ப்பாசனத்தில் இருபுறமும் கயிறு கட்டித் தண்ணீர் இறைக்க உபயோகப் படுத்தும் கூடை
बेंत पु० பிரம்பு
बेंदा, पु० நெற்றிப் பொட்டு ; ஒரு நகை
बेंदी, स्त्री० பொட்டு ; ஒரு நகை
बे, अव्य० 'இல்லாமல்' என்னும் அர்த்தம் கொடுக்கும் ஒரு பகுதி
बेअक़्ल, वि० முட்டாள்
बे-अदब, वि० மரியாதையற்ற
बे-असर, वि० பிரபாவிக்காத
बेआब, वि० பிரகாசமில்லாத
बे-आबरू, वि० கௌரவமற்ற
बेइज़्ज़त, वि० மரியாதையற்ற
बेइज़्ज़ती, स्त्री० அவமரியாதை
बे-इन्तहा, वि० எல்லையற்ற
बे-इनसाफ़, वि० நியாயமற்ற
बेईमान, वि० நாணயமற்ற ; அயோக்கியனை; बेईमानी, स्त्री० நாணயமின்மை ; அயோக்கியத்தனம்
बेउज्र, वि० தடையற்ற
बेउसूल, वि० நிலையான கொள்கையற்ற
बेक़दर, वि० அகௌரவமான
बेक़रार, वि० அமைதியற்ற ; வியாகூலமடைந்த
बेकल, वि० கலக்க மடைந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

बेकली, स्त्री० மனக் கலக்கம்

बेक़सूर, वि० குற்றமற்ற

बेकहा, वि० ஒருவருடைய பேச்சையும் கேட்காத

बेकाम, वि० உத்தியோகமில்லாத; உபயோகமற்ற

बेक़ाबू, वि० வசப்படாத; வசத்துக்கு வராத

बेक़ायदा, वि० சட்ட விரோதமான; ஒழுங்கற்ற

बेकार, वि० दे० बेकाम

बेकुसूर, वि० बेक़सूर

बेखटके, क्रि० பயமின்றி; சங்கோசமின்றி

बेख़बर, क्रि० பிரக்ஞையற்று

बेग, पु० தனவந்தன்; ஒரு பட்டம்

बेगम, स्त्री० ராணி

बेगरज़, वि० சட்டை செய்யாத

बेगाना, वि० அன்னிய; பரிச்சயமற்ற

बेगार, स्त्री० கூலி கொடாமல் பலாத்காரமாய்ச் செய்விக்கும் வேலை; அரைமனதுடன் செய்யும் வேலை;—टालना அரைமனத்துடன் வேலை செய்ய

बेगारी, पु० बेगार கூலி பெறுமல் கட்டாயத்திற்காக வேலை செய்பவன்

बेगि, क्रि० சீக்கிரம்

बेगुनाह, वि० குற்றமற்ற

बेचना, स० விற்க

बेचारा, वि० எளிய; ஆதரவற்ற; अव्य० பாவம்!

बेचैन, वि० அமைதியற்ற; வியாகூலமடைந்த

बेजड़, वि० வேரற்ற; ஆதாரமற்ற

बेज़बान, वि० பேசமுடியாத; ஊமையான

बेजा, वि० உசிதமற்ற

बेजान, वि० உயிரற்ற

बेज़ाब्ता, वि० சட்ட விரோதமான; ஒழுங்கிற்கு விரோதமான

बेज़ार, वि० கோபமான; துக்கமான

बेजोड़, वि० ஜோடி சேராத; இணையற்ற

बेटा, पु० மகன்

बेटी, स्त्री० மகள்

बेठन, पु० மூட்டை கட்டும் துணி

बेठिकाने, वि० இடம் பிசகிய

बेड़, पु० வரப்பு

बेड़ा, पु० தெப்பம்; वि० கோணலான;—पार करना ஆபத்திலிருந்து தப்பிக்க

बेड़ी, स्त्री० விலங்கு

बेडौल, वि० உருவமற்ற; கோரமான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

बेढंगा, वि० நல்ல மாதிரியாயில்லாத; ஒழுங்கில்லாத; விகாரமான

बेढ़ना, स० வேலியிட

बेढ़ब, वि० दे० बेढंगा

बेनु, पु० புல்லாங் குழல்

बेतकल्लुफ़, वि० உபசார முறையில்லாத; சங்கோசமில்லாத

बेतमीज़, वि० ஒழுக்கம் அறியாத

बेतरह, क्रि० மிகவும் மோசமாக; அனுசிதமாக

बेतरीक़ा, वि० ஒழுக்கத்திற்கு விரோதமான; உசிதமில்லாத

बेतहाशा, क्रि० வெகுவேகமாக; பரபரப்புடன்

बेताब, वि० विकल வியாகூலமான; பலஹீனமான

बेतार, वि० கம்பியில்லாத (wireless)—**का तार** கம்பியில்லாத் தந்தி

बेतुका, वि० बेढंगा, சரியாய்ப் பொருந்தாத

बेदख़ल, वि० அதிகாரமில்லாத; தள்ளப்பட்ட

बेदख़ली, स्त्री० அதிகாரத்திலிருந்து நீக்கப்படுதல்

बेदम, वि० மூச்சில்லாத; இறந்த

बेदरोदीवार, वि० வீடு வாசலற்ற

बेदर्द, वि० பிறர் துக்கத்தை உணராத; கொடிய; இரக்கமற்ற

बेदाग़, वि० சுத்தமான; குற்றமற்ற

बेदाद, वि० ஒற்றுமையில்லாத

बेदाना, पु० விதையில்லாத மாதுளை

बेदार, वि० விழித்திருக்கும்; ஜாக்கிரதையா யிருக்கும்

बेदारी, स्त्री० விழிப்பு; ஜாக்கிரதை

बेधड़क, क्रि० பயமின்றி; சங்கோசமின்றி

बेधना, स० துவாரம் செய்ய; குத்த

बेधीर, वि० தைரியமற்ற

बेन, पु० மகுடி; புல்லாங் குழல்

बेनज़ीर, वि० ஒப்பற்ற

बेनवा, वि० ஏழையான

बेनसीब, वि० அதிர்ஷ்டமில்லாத

बेना, पु० சிறு மூங்கில் விசிறி

बेनियाज़, वि० முற்றிலும் சுதந்திரமுள்ள

बेनी, स्त्री० பின்னல்

बेनु, पु० दे० वेणु

बेपरद, वि० ஆடையில்லாத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

बेपरवा } वि० கவலையற்ற;
बेपरवाह } இலக்ஷியமில்லாத; சுயேச்சையான

बेपीर, वि० கருணையற்ற

बेपेंदी, बि० கீழ்ப்பாகம் இல்லாத; அடித்தளம் இல்லாத;—का लोटा நிலையற்றவன்; ஸ்திர புத்தியில்லாதவன்

बेफ़िक्र, वि० கவலையற்ற

बेबस, वि० வசமற்ற; திறமையற்ற

बेबसी, स्त्री० வசமின்மை; சாமர்த்தியமின்மை

बेबहा, वि० बेशक़ीमत, விலைமதிக்க முடியாத

बेबाक़, वि० தீர்க்கப்பட்ட (கடன்)

बेबाक, वि० निडर பயமற்ற

बेभाव, वि० கணக்கிலடங்காத

बेमहल, वि० बेमौक़ा அசந்தர்ப்பமான

बेर, पु० இலந்தைப் பழம்; स्त्री० தடவை; தாமதம்

बेरहम, वि० கருணையற்ற

बेरा, पु० சமயம்

बेरी, स्त्री० दे० बेर

बेरुख़, वि० சமயத்தில் உதவாத; நன்றியற்ற; கோபமுள்ள

बेल, पु० வில்வம்; स्त्री० கொடி

बेलबूटा, पु० சித்திரவேலை; கொடி, பூவேலை

बेलदार, पु० மண்வெட்டுபவன்

बेलन, पु० அப்பளக் குழவி

बेलना, पु० அப்பளக் குழவி स० அப்பளம் அல்லது ரொட்டி இட

बेला, पु० மல்லிகை; அலை; கடலோரம்; நேரம்

बेलाग, वि० முற்றிலும்; தனியான

बेलौस, वि० உண்மையான

बेवक़ूफ़, वि० முட்டாள்

बेवक़्त, क्रि० தவறான சமயத்தில்

बेवफ़ा, वि० நன்றியறிவற்ற

बेवरा, पु० दे० ब्यौरा

बेवरेवार, वि० ब्यौरेवार விவரமான

बेवसाय, पु० दे० व्यवसाय

बेवहरिया, पु० கொடுக்கல் வாங்கல் செய்பவன்

बेवा, स्त्री० விதவை

बेवाई, स्त्री० दे० बिवाई

बेश, क्रि० அதிகமான; நேர்த்தியான

बेशक, क्रि० சந்தேகமின்றி

बेशरम, वि० வெட்கமற்ற

बेशी, स्त्री० அதிகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

बेशुमार, वि० கணக்கிலடங்காத

बेसबब, वि० காரணமில்லாத; ருசு இல்லாத

बेपन, पु० கடலைமாவு

बेसर, पु० பேசரி; நத்து

बेसवा, स्त्री० விலைமாது

बेसाहना, स० விலைக்கு வாங்க

बेसिलसिला, वि० ஸம்பந்தமில்லாத; தொடர்பற்ற

बेसुध, वि० பிரக்ஞையற்ற

बेसुर } वि० ஸ்வரம் பிசகிய
बेसुरा }

बेसूद, वि० बेफ़ायदा வட்டியில்லாத; பிரயோஜனமற்ற

बेहंगम, वि० உருவற்ற; கோரமான

बेह, वि० உத்தமமான

बेहड़, वि० दे० बीहड़

बेहतर, वि० மேலான

बेहतरी, स्त्री० சிரேஷ்டம்; சிலாக்கியம்; நன்மை

बेहतरीन, वि० அதிக சிரேஷ்டமான

बेहद, वि० எல்லையற்ற

बेहया, वि० வெட்கமற்ற

बेहयाई, स्त्री० வெட்கமின்மை

बेहाल, वि० துக்கமான; நிலைமை கெட்ட

बेहिसाब, वि० மிக அதிகமான

बेहूदगी, स्त्री० आशिष्टता அநாகரீகம்; மரியாதையின்மை

बेहूदा, वि० அநாகரீகமான; மரியாதையற்ற

बेहोश, वि० மூர்ச்சையான

बेहोशी, स्त्री० மூர்ச்சை

बै करना, स० बेचना விற்பனை செய்ய

बैअत, स्त्री० கீழ்ப்படிதல்; சிஷ்யனுதல்

बैंगन पु० கத்தரிக்காய்

बैंगनी } वि० ஊதா நிறமான
बैंजनी }

बैज़, पु० முட்டை

बैज़ा, पु० முட்டை; அண்டகோசம்

बैठक, स्त्री० உட்காருமிடம்; கூட்டம்; ஆசனம்

बैठका, पु० கூடம்

बैठकी, स्त्री० பஸ்கி

बैठन, स्त्री० दे० बैठक

बैठना, अ० உட்கார; கை பழக; செலவாக; குறி அமைய

बैठाना, स० உட்கார்த்த; அமைக்க

बैत, स्त्री० செய்யுள்

बैद, पु० வைத்தியன்

बैदगी, स्त्री० வைத்தியம்

बैन, पु० வாக்கு; क्रि० बीच நடுவே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

बैना, पु॰ விவாக காலத்தில் பந்துக்களுக்கு அனுப்பப்படும் மிட்டாய்கள்

बैनामा, पु॰ விற்பனைப் பத்தி

बैपार, स्त्री॰ தொழில்; வியாபாரம்

बैपारी, पु॰ தொழிலாளி; வியாபாரி

बैर, पु॰ விரோதம்;—ठानना, விரோதம் கொள்ளல்; —मोल लेना; பகைத்துக் கொள்ளுதல்;—लेना பழி தீர்க்க

बैरख, पु॰ சேனையின் கொடி

बैराना, अ॰ நரம்பு பிசகிக் கஷ்டப்படுதல்

बैरी, वि॰ வைரி; சத்துரு

बैल, पु॰ எருது; முட்டாள்

बैस, स्त्री॰ வயது; யௌவனம்; पु॰ வைசியர்

बैसाख, पु॰ दे॰ वैशाख

बैसाखी, स्त्री॰ நொண்டியின் கக்க தண்டம் (crutch)

बोआई, स्त्री॰ விதைப்பு; விதைப்புக் கூலி

बोक, पु॰ வெள்ளாட்டுக் கடா

बोकरी, स्त्री॰ बकरी

बोझ, पु॰ சுமை

बोझना, स॰ சுமத்த

बोझल } बोझिल } वि॰ கனமான

बोझा, पु॰ சுமை

बोटी, स्त्री॰ மாமிசத் துண்டு

बोड़ा, पु॰ மலைப் பாம்பு

बोत, पु॰ குதிரையின் ஓர் இனம்

बोतल, स्त्री॰ சீசா

बोता, पु॰ சவாரிக்கு உபயோகப் படுத்தும் ஒட்டகம்

बोदा, वि॰ பலஹீனமான; சோம்பேறியான; முட்டாள்

बोध, पु॰ அறிவு; ஆறுதல்

बोधक, पु॰ உபாத்யாயர்; वि॰ அறிவிக்கும்

बोधगम्य, वि॰ அறியக்கூடிய

बोना, स॰ விதைக்க

बोनी, स्त्री॰ விதைக்கும் பருவம்

बोबा, पु॰ வீட்டின் தட்டு முட்டுச் சாமான்கள்

बोरना, स॰ முழுகச் செய்ய; திரவ பதார்த்தத்தில் தோய்க்க

बोरसी, स्त्री॰ கரியடுப்பு

बोरा, पु॰ சாக்குப் பை

बोरिया, पु॰ ஓலைப் பாய்; விரிப்பு;—बंधना उठाना மூட்டை முடிச்சு எடுத்துக் கொண்டு கிளம்ப

बोरी, स्त्री॰ சிறு சாக்குப் பை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

बोल, पु० வார்த்தை ; பேச்சு ; —बाला रहना நல்ல நிலையில் இருக்க ; செழிப்பாயிருக்க ; அதிகாரத்துடனிருக்க

बोलचाल, स्त्री० சம்பாஷணை ; சிநேக பாவம்

बोलता, पु० ஆத்மா; பிராணன்; वि० சொல் வன்மையுள்ள

बोलना, स० பேச; கூவ; கத்த; சொல்ல

बोलवाना, स० दे० बुलवाना

बोलाचाली, स्त्री० दे० बोलचाल

बोली, स्त्री० பேச்சு ; பாஷை ; கூவுதல் ; பரிகாசம் ;—मारना பரிகாசம் செய்ய ;

बोवाना, स० விதைப்பிக்க

बोसा, पु० முத்தம்

बोहनी, स्त्री० முதல் விற்பனை (போணி)

बोहित, पु० பெரிய படகு

बौंडी, स्त्री० காய்

बौखल, वि० பைத்தியமான

बौखलाना, अ० வெறி கொள்ள

बौछाड़ } बौछार } स्त्री० மழை (shower) ; வார்த்தைப் பெருக்கு ; வியங்கிய வார்த்தை

बौड़म, वि० पागल, பைத்தியமான

बौद्ध, वि० புத்த மதத்தைச் சேர்ந்த ;—विहार, புத்த ஸந்நியாஸிகள் தங்குமிடம்

बौद्धिक, वि० புத்தி சம்பந்தமான

बौना, पु० குள்ளன்

बौर, पु० மாந்துளிர்

बौरना, अ० மாமரம் துளிர்க்க

बौरहा, वि० दे० बावला

बौरा, वि० பைத்தியமான ; ஒன்றும் தெரியாத

बौराना, अ० பைத்தியமாக ; புத்தி பிசக

बौरी, स्त्री० பைத்திய ஸ்திரீ

ब्यवहरिया, पु० दे० वेहरिया

ब्यवहार, पु० கொடுக்கல் வாங்கல் ; வியவகாரம்

ब्यवहारी, पु० காரியம் செய்பவன் ; வட்டிக் கடைக்காரன்

ब्याज, पु० வட்டி

ब्याना, स० உண்டாக்க ; பிறப்பிக்க ; பசு கன்று ஈனுதல்

ब्यापना, अ० பரவ ; சூழ

ब्याल, पु० பாம்பு

ब्याली, स्त्री० பெண் பாம்பு

ब्यालू, पु० இராச் சாப்பாடு

ब्याह, पु० விவாகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ब्याहता, वि० விவாகம் செய்து கொண்ட

ब्योंचना, अ० தேகத்தில் சுளுக்கு ஏற்பட

ब्योंत, स्त्री० நிலைமை ; முறை ; ஏற்பாடு; சட்டைக்காகத் துணியை வெட்டுதல் कतर—ஆழ்ந்தயோசனை ; கபடயோசனை ; பிறர் சொத்தைக் கையாடுதல்; கவலை

ब्योंतना, स० சட்டைக்காக அளவெடுத்துத் துணியை வெட்ட

ब्योंताना, स० துணியை வெட்டுவிக்க

ब्योपार, पु० வியாபாரம்

ब्योरा, पु० விபரம்; சமாசாரம்

ब्रह्मांड़, पु० பதினன்கு லோகங்கள் ; கபாலம்

भ

भंग, पु० அலை ; தோல்வி ; துண்டு; உடைதல் ; 'பங்கி ; என்னும் பானம்

भंगड़, स्त्री० भंगड़ी 'பங்கி' யடிப்பவன்

भंगी, पु० தோட்டி

भंगुर, वि० உடையக்கூடிய ; அழியக் கூடிய

भँगेड़ी, पु० दे० भंगड़

भंजक, वि० உடைக்கிற

भँजन, पु० உடைத்தல்

भँजना, अ० உடைய; சில்லரை மாற்றப்பட்ட ; பிரிக்கப் பட

भँजाना, स० உடைக்க ; சில்லரை மாற்ற

भंटा, पु० கத்தரிக்காய்

भंड, वि० கெட்ட வார்த்தை பேசுகிற ; போக்கிரி ;—फोड़, ரஹஸியம் வெளிப் படுதல்

भंडा, पु० பாத்திரம் ; ரகசியம்; —फोडना குட்டு வெளிப் படுத்த

भंडार, पु० பண்டக சாலை ; சமையலறை ; கஜானு

भंडारा, पु० பண்டக சாலை ; ஸந்நியாஸிகளுக்கு இடும் விருந்து

भंडारी, स्त्री० சிறு அறை ; பொக்கிஷதார் ; உக்கிராணக்காரன்

भंड़ौआ, पु० ஹாஸ்யப் பாட்டு

भँवर, पु० சுழல் ; வண்டு ; தேனீ

भँवरजाल, पु० உலக மாயை

भँवरी, स्त्री० சுழல் ; கருவண்டு

भँवें, स्त्री० புருவங்கள்

भइया, पु० சகோதரன் ; மரியாதை மொழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भकुआ, वि० முட்டாள்

भकुआना, अ० திகிலடைய स० திகில் உண்டாக்க ; முட்டாளாக்க

भकोसना, स० பரபரப்புடன் சாப்பிட

भक्षक, वि० சாப்பிடும்

भक्षना, स० சாப்பிட

भक्षी, वि० சாப்பிடும்

भक्ष्य, वि० சாப்பிடக்கூடிய

भख, पु० உணவு

भखना, स० சாப்பிட

भगंदर, पु० ஆசனவாயில் வரும் ஒரு சிரங்கு

भग, पु० யோனி ; ஐசுவரியம்

भगत, वि० உபாசிக்கும் ; पु० வைஷ்ணவ பக்தன்

भगदड़, स्त्री० ஓட்டம்

भगना, अ० दे० भागना

भगवा, वि० காவி நிறமான

भगाना, स० விரட்ட

भगिनी, स्त्री० சகோதரி

भगीरथ प्रयत्न, ஏதாவதொரு வேலையை நிறைவேற்ற எடுத்துக் கொள்ளும் விசேஷ முயற்சி

भगोड़ा, पु० தன் வேலை அல்லது கடமையை விட்டு விட்டு ஓடியவன் ; பயங்காளி वि० பயந்த ; ஓட்டம் பிடித்த

भगौहाँ, वि० ஓடத் தயாரான ; பயந்த

भग्गू, वि० பயங்காளியான

भग्न, वि० உடைந்த

भग्नावशेष, पु० பாழ் ; உடைந்த துண்டு

भचकना, अ० வியப்பில் மூழ்க ; நொண்டி நடக்க ; ஓட

भजना, स० ஜபிக்க ; பஜனை செய்ய

भजनानंद, पु० பஜனையில் ஆனந்தித்திருப்பவன்

भजनी, पु० பஜனை செய்பவன்

भट, पु० சிப்பாய்

भटकटैया, स्त्री० கண்டங் கத்திரி

भटकना, अ० அலைந்து திரிய ; வழி தெரியாமல் திண்டாட

भटकाना, स० தப்பு வழிகாட்ட ; திண்டாடச் செய்ய

भट्ठा, पु० உலையடுப்பு ; சூளை

भट्ठी, स्त्री० உலையடுப்பு ; சாராயம் காய்ச்சும் இடம்

भठियारा, पु० சத்திரத்தின் மணியக்காரர்

भड़क, स्त्री० பகட்டு ; ஆவேசம் ;—दार பகட்டான

भड़कना, अ० கொழுந்து விட்டெரிய ; சட்டென்று கோபிக்க ; திடுக்கிட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भड़काना, स० தூண்டிவிட

भड़कीला, वि० பகட்டான

भड़भूँजा, पु० தானியம் வறுக்கும் ஜாதி

भड़ुआ, पु० வேசியர் தரகன்

भणित, वि० சொல்லப்பட்ட

भतार, पु० கணவன்

भतीजा, पु० சகோதரனின் மகன்

भतीजी, स्त्री० சகோதரனின் மகள்

भत्ता, पु० வழிச் செலவிற்காகக் கொடுக்கப்படும் 'படி' (batta)

भदईं, स्त्री० புரட்டாசியில் அறுவடையாகும் பயிர்

भद्दा, वि० விகாரமான

भद्र, वि० நாகரீகமான; கண்ணியமான

भद्रता, स्त्री० நாகரிகம்; நல்ல சுபாவம்

भनक, स्त्री० தாழ்ந்த குரல்; வதந்தி

भनकना, भनना } स० சொல்ல

भनभनाना, अ० ரீங்காரம் செய்ய

भनभनाहट, स्त्री० ரீங்காரம்

भबका, पु० காய்ச்சி ரஸம் இறக்கும் பாத்திரம் (retort)

भभकना, अ० கொதிக்க; கொழுந்துவிட்டெரிய

भभकी, स्त्री० மிரட்டுதல்

भब्भड़, भम्भड़ } स्त्री० சீரில்லாத கூட்டம்

भभरना, अ० பயப்பட

भभूका, पु० ஜ்வாலை

भभूत, स्त्री० விபூதி

भयानक, वि० பயங்கரமான

भयाना, अ० பயப்பட; स० பயப்படுத்த

भयावन, भयावह } वि० பயங்கரமான

भर, वि० முழு; பூரா;—सक, முடிந்த மட்டிலும்

भरकना, अ० दे० भड़कना

भरण, पु० போஷணை

भरतखंड, पु० இந்தியா

भरता, पु० கத்திரிக்காய், உருளைக்கிழங்கு முதலியவற்றைச் சுட்டுச் செய்யும் சட்ணி

भरती, स्त्री० நிரம்புதல்; பிரவேசித்தல்

भरना, स० நிரப்ப; தீர்க்க; अ० நிரம்ப; களைக்க; அதிருப்தியடைய; पु० வஞ்சம்

भरनी, स्त्री० ஊடு நூல்

भरपाई, स्त्री० பாக்கித் தொகையைப் பெற்றுக் கொண்டதற்கு ரசீது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भरपूर, वि० பரிபூர்ணமான

भरम, पु० दे० भ्रम

भरमना, अ० அலைந்து திரிய; ஏமாற

भरमाना, अ० சந்தேகமுண்டாக்க; தப்பு வழிகாட்ட; अ० ஆச்சரியப்பட

भरमार, स्त्री० மிகை

भर्राई, स्त्री० நிரம்புதல்; நிரப்பும் கூலி

भर्राई आवाज़, தழுதழுத்த குரல்

भरराना, अ० ஒடிந்து விழ

भरवाना, स० நிரப்பச் செய்ய

भराई, स्त्री० நிரப்புதல்; நிரப்பும் கூலி

भराव, पु० நிரப்புதல்

भरित, वि० நிரம்பிய

भरी, स्त्री० ஒரு தோலா நிறை

भरोसा, पु० நம்பிக்கை

भर्त्ता, पु० கணவன்; எஜமானன்

भर्त्तार, पु० கணவன்

भर्त्सना, स्त्री० தூஷணை

भलमनसत } स्त्री० மேன்மையான தன்மை
भलमनसी }

भला, अव्य० நல்லது, சரி; वि० நல்ல; மேலான;—चंगा செளக்கியமாய்;—बुरा कहना நிந்திக்க

भलाई स्त्री० நன்மை

भलामानुस, पु० கனவான்

भले, क्रि० நன்ருய்; अव्य० பேஷ்

भले ही, क्रि० ஆனலும்

भव, पु० உற்பத்தி; உலகம்

भवदीय, वि० आपका தங்களுடைய

भवन, पु० வீடு; மாளிகை

भवभय, पु० ஜனன மரண பயம்

भवितव्य, पु० होनहार, வரப்போகிற விஷயம்

भवितव्यता, स्त्री० விதி

भविष्य, वि० பிற்காலத்து; पु० எதிர் காலம்

भविष्यत्, पु० எதிர் காலம்

भविष्यद्वक्ता, पु० பின் நடக்கப்போவதைச் சொல்பவன்

भविष्यद्वाणी, स्त्री० பின் வருவதைச் சொல்லுதல்

भव्य, वि० அழகிய; பிரகாசமான

भसना, अ० நீந்த; முழுக

भसाना, स० தண்ணீரில் போட

भसुंड, पु० யானை

भसुर, पु० கணவனின் அண்ணன்

भस्म, पु० சாம்பல்; விபூதி

भस्मक, पु० யானைத்தீ என்னும் நோய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भस्मीभूत, वि० எரிந்து சாம்பலான

भहराना, अ० திடீரென்று விழ

भाँग, स्त्री० 'பங்கி' என்னும் லாகிரி வஸ்து

भाँज, स्त्री० முறுக்குதல்; சில்லரை மாற்றுதல்

भाँजना, स० முறுக்க

भाँटा, पु० கத்திரிக்காய்

भाँड़, पु० விதூஷகன்; பாத்திரம்; தொந்தரவு

भाँड़ा, पु० பாத்திரம்;—फूटना குட்டு வெளியாக

भांडागार, पु० दे० भंडार

भांडागारिक, पु० दे० भंडारी

भांडार, पु० दे० भंडार

भाँत }
भाँती } स्त्री० விதம்; மாதிரி

भाँपना, स० ஊகிக்க

भाँवर, स्त्री० சுற்றுதல்; பிரதக்ஷிணம்

भाई, पु० சகோதரன்;—चारा, சகோதர மனப்பான்மை;—बंद உறவினர்;—बिरादरी ஜாதிக்காரர்

भाऊ, पु० மனோநிலைமை; நிலைமை; ஸ்வரூபம்; அன்பு

भाखना, स० சொல்ல

भाखा, स्त्री० दे० भाषा

भाग, पु० பாகம்; பாக்கியம்; வகுத்தல்

भागदौड़, स्त्री० दे० भगदड़

भागधेय, पु० பாக்கியம்; அரசவரி; தாயாதி

भागना, अ० ஓட்டம் பிடிக்க

भागफल, पु० ஈவு

भागी, पु० பங்காளி; உடைமையுள்ளவன்

भागीरथी, पु० கங்கா நதி

भाग्य, पु० விதி; அதிர்ஷ்டம்

भाजक, पु० வகுக்கும் தொகை वि० பங்கிடுகிற

भाजन, पु० பாத்திரம்; தகுந்தவன்

भाजी, स्त्री० கறிகாய்

भाज्य, पु० வகுக்கப்படும் எண்

भाट, पु० ராஜவிருது பாடுபவன்; முகஸ்துதி செய்பவன்

भाटा, पु० கடல் நீர் வடிதல்

भाड़, पु० பொரி, கடலை, வகையறு வறுக்கும் அடுப்பு;—झोंकना, தாழ்ந்த வேலை செய்ய;—में झोंकना நெருப்பில் போட

भाड़ा, पु० சத்தம்; வாடகை; भाड़े का टट्टू வெறும் பண ஆசையால் பிறர் வேலையைச் செய்பவன்

भात, पु० சாதம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भाथा, पु० அம்பறுத் தூணி
भाथी, स्त्री० துருத்தி
भादों
भाद्र } पु० புரட்டாசி
भाद्रपद,
भान, पु० பிரகாசம் ; ஞானம்
भानजा, पु० மருமகன் (சகோதரி புத்திரன்)
भानमती, स्त्री० மந்திரக்காளி ; —का पिटारा பற்பல தினுசான வஸ்துக்கள்சேர்ந்த தொகுப்பு
भाना, अ० தெரிய ; தோன்ற ; மனதுக்குப் பிடித்திருக்க
भानु, पु० சூரியன்
भानुजा, स्त्री० யமுனை
भाप, स्त्री० நீராவி
भाभी, स्त्री० மதனி ; அண்ணி
भाम, भामा, स्त्री० ஸ்திரீ
भायप, पु० दे० भाईचारा
भार, पु० பாரம் ; பொறுப்பு ; ஓர் நிறுவை ;—उठाना, பொறுப்பு ஏற்றுக் கொள்ள ;—उतारना பொறுப்பு நிறைவேற்ற
भारती, स्त्री० வாக்கு ; ஸரஸ்வதி ; ஓர் மூலிகை
भारतीय, वि० இந்தியாவின் पु० இந்தியர்
भारवाहक, वि० சுமை தூக்கும்
भारी, वि० கனமான ; பெரிய
भारी-भरकम, वि० பெரியதும் கனமுள்ளதுமான
भाल, पु० நெற்றி
भालना, स० நன்றாய்ப் பார்க்க
भाला, पु० ஈட்டி
भालाबरदार, पु० ஈட்டிக்காரன்
भाली, स्त्री० ஈட்டியின் நுனிப் பாகம்
भालू, पु० கரடி
भाव, पु० இருத்தல் ; மனநிலைமை ; அபிப்பிராயம் சிரத்தை ; பக்தி ; விலைவிகிதம்; தளுக்கு;—उतरना, விலை இறங்கிவிடுதல் ;—चढ़ना விலை ஏறிவிடுதல்
भावज, स्त्री० அண்ணனின் மனைவி
भावता, वि० பிரியமான
भावताव, पु० விலை விகிதம் வகையறு
भावना, स्त्री० பாவனை ; தியானம் ; விருப்பம்
भावनीय, वि० பாவிக்கத்தக்க
भावार्थ, पु० கருத்துரை
भावी, स्त्री० எதிர்காலம் ; விதி
भावुक, वि० நாசூக்கான மனோநிலைமையுள்ள
भाषण, पु० பிரசங்கம்
भाषांतर, पु० மொழி பெயர்ப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भाषी, पु० பேசுபவன்

भाष्य, पु० சூத்திரங்களின் வியாக்கியானம்;—कार வியாக்கியானம் செய்பவர்

भास, पु० பிரகாசம்; கிரணம்

भासना, अ० தெரியவர; பிரகாசிக்க

भासमान, वि० தென்படும்

भासित, वि० பிரகாசமான

भास्कर, पु० சூரியன்

भिंगाना / भिंजाना } स० दे० भिगोना

भिंडी, स्त्री० வெண்டைக்காய்

भिक्षा, स्त्री० பிச்சை

भिक्षु, पु० பிச்சைக்காரன்; ஸன்னியாஸி

भिक्षुक / भिखमंगा } पु० பிச்சைக்காரன்

भिखारिणी / भिखारिन } स्त्री० பிச்சைக்காரி

भिखारी, पु० பிச்சைக்காரன்

भिगोना, स० நனைக்க

भिजवाना, स० அனுப்பச் செய்ய

भिजाना, स० दे० भिगोना

भिज्ञ, वि० அறிந்த

भिड़, स्त्री० குளவி

भिड़ना, अ० சண்டையில் கலக்க

भितल्ला, पु० மடித்த துணியின் உள் மடிப்பு

भित्ति, स्त्री० சுவர்; படம் எழுதும் காகிதம், துணி வகையரு; பயம்

भित्तिचित्र, पु० சுவரில் எழுதிய சித்திரம்

भिदना, अ० நுழைய; துவாரமாக; காயப்பட

भिनकना / भिनभिनाना } अ० ரீங்காரம் செய்ய

भिनसार, पु० காலை

भिन्न, वि० தனியான; வேறு पु० பின்னம்

भिन्नता, स्त्री० வேற்றுமை

भिलावाँ, पु० சேங்கொட்டை

भिश्ती, पु० தோல் பையில் தண்ணீர் தூக்குபவன்

भिषक, पु० வைத்தியன்

भींगना / भींजना } अ० நனைய

भी, अव्य० கூட

भीक, वि० பயந்த

भीकर, वि० பயங்கரமான

भीख, स्त्री० பிச்சை

भीगना, अ० நனைய

भीटा, पु० மேடு; வெற்றிலைப் பாத்தி

भीड़, स्त्री० கூட்டம்; ஆபத்து

भीड़भड़क्का, पु० / भीड़भाड़, स्त्री० } கூட்டம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भीत, स्त्री॰ சுவர் वि॰ பயந்த

भीतर, क्रि॰ உள்ளே

भीतरी, वि॰ உள்ளேயுள்ள

भीति, भीती } स्त्री॰ பயம்; சுவர்

भीन, पु॰ விடியற்காலை

भीनना, अ॰ நுழைய; ஊற; நிரம்ப

भीर, स्त्री॰ दे॰ भीड़

भीरु, वि॰ பயங்காளியான

भीरुता, स्त्री॰ பயங்காளித்தனம்

भीरे, क्रि॰ அருகே

भील, पु॰ காட்டில் வசிக்கும் ஓர் ஜாதி

भीषण, वि॰ பயங்கரமான

भुँइ, स्त्री॰ பூமி

भुँजना, अ॰ दे॰ भुनना

भुअंगा, पु॰ दे॰ भुजंग

भुअन, पु॰ दे॰ भुवन

भुआल, पु॰ ராஜா

भुइँडोल, पु॰ பூகம்பம்

भुक, पु॰ போஜனம்; தீ

भुक्खड़, वि॰ பசித்த; அதிகமாய்ச் சாப்பிடுகிற; தரித்திரஞன

भुक्त, वि॰ சாப்பிடப்பட்ட

भुखमरा, वि॰ பசியால் வருந்தும்

भुखाना, अ॰ பசியால் வருந்த

भुगतना, स॰ சகிக்க; அனுபவிக்க; கணக்குத் தீர்க்க

भुगतान, पु॰ கணக்குத் தீர்த்தல்

भुगताना, स॰ கணக்குச் செலுத்த

भुजंग, भुजग } पु॰ பாம்பு

भुजदंड, पु॰ கையின் மேற்பாகம்

भुजपाश, पु॰ கழுத்தின்மேல் கைபோடுவது

भुदबंद, पु॰ வங்கி

भुजमूल, पु॰ கக்கம்

भुजा, स्त्री॰ தோள்; கை

भुजाली, स्त्री॰ வளைந்த கத்தி

भुजिया, पु॰ புழுங்கலரிசி; வறுத்த கறி

भुट्टा. पु॰ சோளக்கதிர்; பழக்கொத்து

भुथरा, वि॰ கூர் மழுங்கிய

भुनगा, पु॰ ஒரு சிறு பூச்சி

भुनना, अ॰ வறுக்கப்பட

भुनाना, स॰ வறுக்கச் செய்ய; சில்லறை மாற்ற

भुरकना, अ॰ முறமுறப்பாய் உலற

भुरका, भुरकुस पु॰ பொடி

भुरता, पु॰ சட்ணி

भुरभुरा, वि॰ மணல் மணலான

भुरभुराना, स॰ தின்பண்டங்களுக்கு உப்பு, சர்க்கரை முதலியன தூவுதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भुलक्कड़, वि० மறதியுள்ள
भुलवाना, स० மறக்கடிக்க; பிரமை யுண்டாக்க
भुलाना, स० மறக்க; மறக்கடிக்க; अ० மறந்துவிட
भुलावा, पु० ஏமாற்றம்;—देना, தவருன வழியில் இட்டுச் செல்லல்
भुव, स्त्री० பூமி
भुवन, पु० உலகம்
भुवा, पु० பஞ்சு
भुवपाल, पु० ராஜா
भुस, पु० दे० भूसा
भुसी, स्त्री० दे० भूसी
भूँकना, अ० குலைக்க
भूँचाल, पु० பூகம்பம்
भूँजना, स० வறுக்க; துன்புறுத்த
भूँजा, पु० வறுக்கப்பட்ட தானியம்
भू, स्त्री० பூமி
भूख, स्त्री० பசி
भूखा, वि० பசியுள்ள; ஏழையான
भूगर्भ, पु० பூமியின் உள் பாகம்;—शास्त्र பௌதீக சாஸ்திரம் (geology)
भूचर, पु० தரை வாழ்ப் பிராணி
भूचाल, पु० பூகம்பம்
भूडोल, पु० பூகம்பம்
भूत, पु० பூதம்; இறந்தகாலம்; பிராணி वि० கழிந்த
भूतत्व-विद्या, स्त्री० दे० भूगर्भशास्त्र
भूतपूर्व, वि० முற்காலத்து; மாஜி
भूतल, पु० பூமியின் மேற் பாகம்; உலகம்
भूतात्मा, पु० சரீரம்; ஜீவாத்மா
भूति, स्त्री० ஐசுவரியம்; பிறப்பு; மேன்மை; பஸ்மம்
भूतिकर्म, पु० குடும்ப வேலைகள்
भूतिनी, स्त्री० பெண் பூதம்
भूधर, पु० மலை
भूनना, स० வறுக்க
भूपाल, पु० ராஜா
भूमंडल, पु० பூமி
भूमि, स्त्री० பூமி; நிலம்
भूमिका, स्त्री० முகவுரை
भूमिज, वि० நிலத்தில் விளைந்த
भूरा, वि० பழுப்பு நிறமான; மண் நிறமான
भूरि, वि० அதிகமான; पु० பொன்
भूल, स्त्री० பிசகு; மறத்தல்
भूलना, स० மறக்க; பிசகு செய்ய; கர்வம் கொள்ள
भूलभुलैयाँ, स्त्री० பல சுற்றுவழிகளுடன் புத்தி தடுமாறச் செய்யும் கட்டிடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भूवा, पु० दे० भुवा

भूशायी, वि० தரையில் படுத் திருக்கும் ; இறந்த

भूषण, पु० } அலங்காரம் ;
भूषा, स्त्री० } நகை

भूषित, वि० அலங்கரிக்கப் பட்ட

भूसा, पु० } உமி
भूसी, स्त्री० }

भृंग, पु० குளவி ; வண்டு

भृंगराज, पु० கரிசாராங் கண்ணி

भृंगी, स्त्री० குளவி வண்டு

भृकुटी, स्त्री० புருவம்

भृत्य, पु० வேலைக்காரன்

भेंट, स्त्री० சந்திப்பு ; காணிக் கை;—**करना** யாரையாவது சந்திக்கச் செல்வது ;—**देना** காணிக்கை செலுத்து வது ; அர்ப்பணம் செய் வது

भेंटना, स० சந்திக்க ; தழுவிக் கொள்ள

भेक, पु० தவளை

भेख, पु० दे० भेष

भेजना, स० அனுப்ப

भेजा, पु० மூளை

भेड़, स्त्री० செம்மறியாடு

भेड़ा, पु० செம்மறியாட்டுக் கடா

भेड़िया, पु० ஓநாய்

भेड़िया धसान, पु० குருட்டுத் தனமாய்ப் பின்பற்றுதல்

भेड़ी, स्त्री० दे० भेड़

भेद, पु० சத்துருவின் கக்ஷிக் குள் பிளவு உண்டாக்கு தல் ; ரகஸியம் ; வித்தியா சம் ; விதம் ; மாதிரி ; பிளவு ; துவாரம் ;—**खोलना** ரஹஸியத்தை வெளிப் படுத்த ;—**लेना** உளவறிய

भेदक, वि० துவாரம் செய்யும்; பேதி யுண்டாக்கும்

भेदन, पु० துளைத்தல்

भेदना, स० துளைக்க

भेदभाव, पु० வித்தியாசம்

भेदिया, पु० உளவாளி

भेदी, वि० दे० भेदक

भेद्य, वि० பிளக்கக்கூடிய ; துளைக்கக்கூடிய

भेरी, स्त्री० பேரிகை ; பெரிய நகரா

भेली, स्त्री० வெல்ல உருண்டை

भेव, पु० ரகசியம் ; ஸ்வபாவம்

भेष, पु० வேஷம்

भेषज, पु० ஔஷதம்

भेस, पु० வேஷம் ; செயற்கை அலங்காரம்

भैंस, स्त्री० எருமை

भैंसा, पु० எருமைக்கடா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भैन, भैना, स्त्री० சகோதரி
भैया, पु० சகோதரன்
भैयाचारी, स्त्री० சகோதரத் தன்மை
भैयादूज, स्त्री० வட இந்தியா வில் சகோதரி சகோதர னுக்கு மரியாதை செய் யும் ஒரு கொண்டாட் டம்
भैरव, वि० பயங்கரமான
भोंकना, स० கூரிய ஆயுதத் தால் குத்த
भोंडा, वि० விகாரமான
भोंतर वि० கூர் மழுங்கிய
भोंदू, वि० முட்டாள்
भोंपू, पु० ஊதும் வாத்தியம்
भोक्ता, वि० சாப்பிடுகிற; அனு பவிக்கிற; சுகஜீவியான
भोग, पु० அனுபவித்தல்; சுக போகம்; விதி; நைவேத் தியம்
भोगना, अ० அனுபவிக்க
भोग-विलास, पु० சுகபோகம்
भोगी, पु० அனுபவிப்பவன் वि० விஷய வாசனைகளில் ஈடு பட்ட
भोग्य, वि० அனுபவிக்கக் கூடிய; உபயோகிக்கக் கூடிய
भोज, पु० விருந்து
भोज्य, पु० சாப்பாட்டுப் பதார்த்தம் वि० சாப் பிடக்கூடிய
भोडल, पु० अब्रक காக்காப் பொன்
भोर, पु० அதிகாலை
भोला, वि० கபடமற்ற;—भाला கபடமற்ற
भौं, स्त्री० भौंह புருவம்;—टेढ़ी करना கோபத்தைத் தெரி விக்க;—तानना புருவம் நெறிக்க
भौंर, पु० சுழல்
भौंरा, पु० குளவி; வண்டு; நில வறை
भौंरी, स्त्री० சுழல்; விவாகத் தில் அக்கினிப் பிரதக்ஷி ணம்; மாட்டின் சுழி
भौंह, स्त्री० புருவம்
भौगोलिक, वि० பூகோள சம் பந்தமான
भौचक, वि० திகைத்த
भौजाई, स्त्री० மதனி
भौतिक, वि० பஞ்சபூத சம்பந் தமான
भौन, पु० दे० भवन
भौम, वि० பூமி சம்பந்தமான पु० செவ்வாய்க் கிரகம்
भौमवार, पु० செவ்வாய்க்கிழ மை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

भौमिक, वि० பூமி சம்பந்தமான पु० ஜமீன்தார்

भ्रंश, पु० வீழ்ச்சி, वि० கெட்ட; விழுந்த

भ्रकुटि, स्त्री० दे० भ्रुकुटी

भ्रम, पु० பிரமை; மலைப்பு

भ्रमण, पु० சுற்றுதல்; அலைதல்

भ्रमना, अ० சுற்ற; வழி தப்பி அலைய

भ्रमर, पु० குளவி; வண்டு

भ्रमात्मक, वि० சந்தேகமான; மலைக்கக்கூடிய

भ्रमाना, स० சுற்ற; மலைக்கச் செய்ய

भ्रष्ट, वि० கெட்டுப்போன; வீழ்ச்சியடைந்த

भ्रांति, स्त्री० பிரமை; ஏமாற்றம்; சந்தேகம்; புத்தி மயக்கம்

भ्राता, पु० சகோதரன்

भ्रातृत्व, पु० சகோதரத் தன்மை

भ्रामक, वि० மலைக்கச் செய்கிற

भ्रुकुटी, भ्रू } स्त्री० புருவம்

भ्रूण, पु० கர்ப்பம்

भ्रूभंग, पु० புருவம் நெறித்தல்

म

मंगता, मंगन } पु० பிச்சைக்காரன்

मँगनी, स्त्री० இரவல்; இரவல் வாங்கிய வஸ்து; விவாக நிச்சயம்

मंगल, पु० மங்களம்; செவ்வாய்க் கிழமை; செவ்வாய்க் கிரகம்

मंगलवार, पु० செவ்வாய்க் கிழமை

मँगाना, स० வரவழைக்க

मंच, पु० மேடை; மஞ்சம்; கட்டில்

मंजन, पु० பற்பொடி

मंजना, अ० தேய்க்கப்பட; பழக

मंजरी, स्त्री० தளிர்; பூங்கொத்து

मंजाना, स० தேய்க்கச் செய்ய

मंजार, स्त्री० பூனை

मंज़िल, स्त्री० பிரயாணிகள் தங்குமிடம்; மாடி

मंज़िलत, स्त्री० ओहदा உத்தியோகம்; பதவி

मंजीर, पु० சலங்கை; சிலம்பு

मंजु, मंजुल } वि० அழகான

मंज़ूर, वि० ஒப்புக்கொள்ளப்பட்ட;—**करना** ஒப்புக்கொள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मंज़ूरी, स्त्री० சம்மதம்
मंजूषा, स्त्री० சிறு பெட்டி
मंझला, वि० நடுவிலுள்ள, मंझला भाई நடு சகோதரன்
मंडन, पु० அழகு படுத்துதல்; ருஜுக்களுடன் ஸ்தாபித்தல்
मंडराना, अ० வட்டமிட
मंडल, पु० வட்டம்; மண்டலம்; சபை
मंडलाकार, वि० வட்டமான
मंडली, स्त्री० சிறிய சபை
मँड़वा, पु० மண்டபம்
मंडित, वि० அலங்கரிக்கபட்ட நிரப்பப்பட்ட
मंडी, स्त्री० மண்டி; பேட்டை
मंडूक, पु० தவளை
मंतव्य, पु० எண்ணம்
मंत्र, पु० ஆலோசனை; மந்திரம்;—जंत्र மந்திரம் போடுதல்;—फूंकना, மந்திரம் போட
मंत्रणा, स्त्री० ஆலோசனை
मंत्रित्व, पु० மந்திரிப் பதவி
मंथन, वि० கடைதல்; பிரயாசைப்பட்டு தத்துவத்தை அறிதல்
मंथर, वि० சோம்பேறியான; மந்தமான; கனத்த
मंद, वि० மந்தமான; சோம்பேறியான; முட்டாளான;—भाग्य துர்ப்பாக்கியம்
मंदा, वि० दे० मंद
मंदाग्नि, स्त्री० அஜீரணம்
मंदार, पु० மந்தாரை; எருக்கு
मंदिर, पु० கோயில்; வீடு
मंदी, स्त्री० விலை விழுந்துவிடுதல்
मंद्र, वि० அழகான; पु० கம்பீரமான த்வனி
मंशा } स्त्री० விருப்பம்; உத்
मंसा } தேசம்
मंसूख़, वि० ரத்து செய்யப்பட்ட
मआज़-अल्लाह, अव्य० கடவுள் காப்பாற்றட்டும்!
मआनी, पु० माने அர்த்தம்; உத்தேசம்
मआश, स्त्री० आजीविका ஜீவனோபாயம்
मकई, स्त्री० சோளம்
मकड़ा, पु० பெரிய சிலந்தி
मक़तब, पु० பள்ளிக்கூடம்
मक़तल, पु० கொலைக்களம்
मक़तूब, वि० எழுதப்பட்ட पु० வியாசம்; பத்திரம்
मक़दूर, पु० शक्ति, சாமர்த்தியம் சக்தி
मक़फूल, वि० அடகு வைத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मक़बरा, पु० கல்லறை; சமாதி

मक़बूल, वि० ஒப்புக்கொள்ளப் பட்ட; தேர்ந்தெடுக்கப் பட்ட; நல்ல

मक़रूज, वि० ऋणी கடன்பட்ட

मक्रूह, वि० வெறுக்கப்பட்ட; அசிங்கமான

मक़सद, पु० அபிப்பிராயம்; விருப்பம்

मक़सूद, वि० உத்தேசிக்கப் பட்ட

मकान, पु० வீடு; இருப்பிடம்

मकु, अव्य० शायद, ஒருக்கால்

मकोड़ा, पु० பூச்சி

मकोय, स्त्री० ஒருவிதப் பெரிய மணத்தக்காளி

मक्का, पु० சோளம்

मक्कार, वि० கபடமான

मक्खन, पु० வெண்ணெய்

मक्खी, स्त्री० ஈ;—**मारना** வேலை இல்லாதிருக்க

मक्खीचूस, पु० வடிக்கட்டின கஞ்சன்

मख़ज़न, पु० கஜானா; திரட்டு

मख़तूल, पु० கறுப்புப்பட்டு

मख़दूम, पु० எஜமானன்

मख़मल, स्त्री० வெல்வெட்டுத் துணி

मख़लक़, वि० செய்யப்பட்ட; स्त्री० சிருஷ்டிக்கப்பட்ட வை

मख़लूक़ात, स्त्री० ख़िलकत का बहु० ஜீவ ஜந்துக்கள்

मख़लूत, वि० சேர்க்கப்பட்ட

मखशाला, स्त्री० யக்ஞ சாலை

मखाना, पु० வறுத்த தாமரை விதை

मखौल, पु० பரிகாசம்

मग, पु० மார்க்கம்

मगज़, पु० மூளை;—**खाना** (**चाट-ना**) மிகத் துன்புறுத்துவது;—**खाली करना**, அளவு கடந்து யோசித்து மூளையைக் களைப்படையச் செய்தல்;—**पच्ची**, அளவுக்குமிஞ்சி யோசித்தல்

मगज़ी, स्त्री० துணியின் கரை

मगन, वि० சந்தோஷமான; ஆழ்ந்த

मग़मूम, वि० துக்கப்படுகிற

मगर, पु० முதலை अव्य० ஆனால்

मग़रिब, पु० மேற்கு

मग़रूर, स्त्री० घमंडी கர்வமுள்ள

मग़रूरी, वि० घमंड கர்வம்

मग़लूब, वि० पराजित தோல்வியுற்ற

मगु, पु० मार्ग வழி

मग़ज़, पु० मस्तिष्क மூளை

मग्न, वि० डूबा हुआ முழுகிய; லயித்த; சந்தோஷமான

मचक, स्त्री० दबाव, அமுத்துதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मचकना, स० அழுத்த
मचलना, अ० हठ करना பிடிவா தம் செய்ய
मचला, वि० பிடிவாதம் செய் கிற
मचलाना, अ० வாந்தி வர
मचान, स्त्री० வயலில் காவல் மேடை
मचाना, स० சண்டை, இரைச் சல், உபத்திரவம் முதலி யவை உண்டாக்க
मचिया, स्त्री० சிறு கட்டில்
मच्छ, पु० பெரிய மீன்
मच्छड़, मच्छर } पु० கொசு
मच्छी, मछली } पु० மீன்
मछुआ, मछुवा } पु० செம்படவன்
मज़कूर, वि० சொல்லப்பட்ட; சர்ச்சை செய்யப்பட்ட
मज़कूरा-वाला, वि० மேலே சொல்லப்பட்ட; முற் கூறிய
मज़दूर, पु० கூலியாள்; தொழி லாளி
मज़दूरी, स्त्री० கூலி வேலை; கூலி
मजनूँ, पु० காதற் பித்துக் கொண்டவன்; वि० மெலிந்த
मज़बूत, वि० दृढ़ கெட்டியான; பலமுள்ள
मज़बूर, वि० विवश வேறு; வழி யற்ற
मज़बूरन्, क्रि० लाचारी से கட்டா யப் படுத்தப்பட்டு; வேறு வழியின்றி
मज़बूरी, स्त्री० बेबसी கட்டாயம்; வேறு வழியில்லாமை
मजमा, पु० जमघट கூட்டம்
मजमूआ, पु० சேர்க்கை वि० சேர்க்கப்பட்ட
मज़मून, पु० लेख வியாசம் அல் லது பிரசங்கத்தின் விஷ யம்
मजरूआ, वि० உழுது விதைக் கப்பட்ட
मजलिस, स्त्री० सभा சபை; திரு விழா; நர்த்தனக் கூடம்
मज़लूम, वि० கொடுமையுடன் நடத்தப்பட்ட
मज़हब, पु० धर्म மதம்
मज़ा, पु० ருசி; ஆனந்தம்
मज़ा चखना செய்கையின் பலன் அனுபவித்தல்;— चखाना, செய்கையின் பலனை அனுபவிக்கச் செய்தல்
मज़ाक़, पु० हँसी-ठट्ठा, பரிகாசம்
मज़ाक़िया, पु० விநோதப் பிரி யன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मजाज़न, क्रि० முறைப்படி ; சட்டப்படி
मजाज़ी, वि० செயற்கையான; நகலான ; லௌகீகமான
मज़ामीन, पु० வியாசங்கள்
मज़ार, पु० कब्र சமாதி
मजारी, स्त्री० बिल्ली பூனே
मजाल, स्त्री० शक्ति சாமர்த்தியம்
मजीठ, स्त्री० சிவப்புச் சாயம் இறக்கும் செடி
मजीठी, वि० சிவப்பு
मजीद, वि० உயர்ந்த ; பவித்திரமான (क़लाम-मजीद குரான்)
मजीरा, पु० சிறிய ஜாலரா
मजूर, पु० मज़दूर கூலியாள்
मजूरी, स्त्री० दे० मज़दूरी
मज़ेदार, वि० स्वादिष्ट ருசியான ; நேர்த்தியான
मज्जन, पु० ஸ்நானம்
मज्जा, स्त्री० எலும்பினுள்ளிருக்கும் பதார்த்தம்
मझधार, स्त्री० நடு ஆறு
मझला, वि० மத்தியிலுள்ள
मझार, क्रि० நடுவில்
मझोला, वि० மத்தியிலுள்ள ; நடுத்தரமான
मटक, स्त्री० गति போக்கு ; டம்பமாய் நடத்தல்
मटकना, अ० டம்பமாய் நடக்க
मटका, पु० बड़ा घड़ा பெரிய மண் பாண்டம்
मटकाना, स० கண் சிமிட்ட
मटकी, स्त्री० छोटा मटका சிறிய மண் பாண்டம்
मटमैला, वि० खाकी காக்கி நிறமான
मटर, पु० பட்டாணி
मटर-गश्त, पु० உலாவுதல்
मटियामेट, पु० सर्वनाश அழிவு ; நாசம்
मट्टी, स्त्री० दे० मिट्टी
मट्ठा, पु० மோர்
मठ, पु० மடம்
मठिया, पु० சிறிய மடம்; குடிசை
मडयी, स्त्री० குடிசை
मड़वा, पु० மண்டபம்
मड़ाई, स्त्री० (स० मड़ाना) பிணே அடித்தல்
मडुक, पु० கேழ்வரகு
मढ़ना, स० சுற்ற ; சுமத்த ; குற்றஞ்சாட்ட
मढ़ना, स० டமாரம் முதலியவைகளுக்குத் தோல் போட
मढ़ी, स्त्री० दे० मठिया
मतंग, पु० யானே
मत, पु० அபிப்பிராயம் ; மதம்; 'ஓட்'(vote)—दाता,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாக்காளர், —दान ஓட்ட ளித்தல் अव्य० கூடாது (கட்டளையில் மட்டும்)

मतबा, पु० அச்சுக்கூடம்

मतलब, पु० அர்த்தம்; உத்தேசம்; சம்பந்தம்; சுயநலம்

मतलबी, वि० சுயநலங் கொண்ட

मतली, स्त्री० मिचली மசக்கை; வாந்தி யெடுத்தல்

मतवाला, वि० பைத்தியம் பிடித்த; வெறி கொண்ட

मताधिकार, पु० 'ஓட்' கொடுக்கும் அதிகாரம் (franchise)

मतानत, स्त्री० मज़बूती, கெட்டித் தன்மை; புஷ்டி

मतीन, वि० पक्का கெட்டியான

मतीरा, पु० முலாம்பழம்

मत्त, वि० मस्त

मत्था, पु० நெற்றி

मत्सर, पु० பொறாமை

मथना, स० கடைய; துவம்சம் செய்ய; நன்கு தேட

मथनी, स्त्री० தயிர் கடையும் பாத்திரம்; மத்து; கடைதல்

मथानी, स्त्री० மத்து

मद, पु० ஆனந்தம், கர்வம்; வெறி स्त्री० கணக்கு (பேரேடு)

मदकची, वि० குடிப்பழக்க முள்ள

मदद, स्त्री० உதவி;—गार உதவி செய்பவன்

मदमत्त, वि० மதம் பிடித்த

मदरसा, पु० பள்ளிக்கூடம்

मद-होश, वि० मस्त போதை கொண்ட

मदांध, वि० दे० मदमत्त

मदाख़िलत, स्त्री० தலையிடுதல்; அதிகாரம் ஸ்தாபித்தல்; —बेजा உரிமை யின்றி தலையிடுதல்

मदार, पु० अर्क எருக்கு

मदारी, पु० குரங்காட்டி

मदिरा, स्त्री० शराब சாராயம்

मदीय, वि० என்னுடைய

मदीला, वि० नशीला போதை யுண்டாக்கும்

मदोन्मत्त, वि० மதம் பிடித்த

मद्धे, अव्य० மத்தியில்; பற்றி

मद्य, पु० சாராயம்

मधु, पु० தேன்; வசந்த காலம் वि० இனிப்பான

मधुकर } पु० குளவி; வண்டு;
मधुप } தேனீ

मधुकरी, स्त्री० அன்னப் பிச்சை; பிக்ஷாபாத்திரத்தில் விழுந்திருக்கும் பற்பல விதமான பண்டங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मधुमक्खी, स्त्री० தேனீ
मधुर, वि० मीठा, இனிமையான
मध्य, पु० நடுவு
मध्यम, वि० நடுத்தரமான ;—पुरुष முன்னிலை (இலக்கணம்)
मध्यवर्त्ती, वि० நடுவேயுள்ள
मध्यस्थ, पु० மத்தியஸ்தன் ; நடு நிலையிலிருப்பவன்
मध्यान्ह / **मध्याह्न** पु० மத்தியானம் ; நடுப்பகல்
मन, पु० மனம் ; விருப்பம் ; மணங்கு
मनका, पु० ஜபமாலையின் மணி
मनकामना, स्त्री० விருப்பம்
मनक़ूला, वि० ஸ்திரமில்லாத ; ஜங்கம (जायदाद मनक़ूला ஜங்கம சொத்து)
मनकूला, वि० மணந்த
मनबहलाव, पु० மனதை மகிழ்வித்தல்
मनगढंत, वि० கற்பனை செய்த स्त्री० வெறுங் கற்பனை
मनचला, वि० साहसी துணிவுள்ள ; ஆவலுள்ள
मनचाहा / **मनचीता** वि० इच्छित விரும்பிய
मनज़र, पु० दृश्य காக்ஷி
मनन, पु० தியானம் ; மனம் செலுத்திப் படித்தல் ;—शील ஆலோசிக்கும் சுபாவமுள்ள
मनभाया, वि० மனதிற்குப் பிடித்த
मनमाना, वि० இஷ்டப்பட்ட क्रि० இஷ்டம் போல
मन मारना, अ० उदास होना வருந்த
मनमुटाव, पु० மனஸ்தாபம்
मनमोदक, पु० மனப்பால்
मनमौजी, वि० மனம் போன படி நடப்பவன்
मनवांछित, वि० விரும்பிய
मनशा, स्त्री० इच्छा விருப்பம் ; கருத்து
मनसब, पु० ओहदा உத்தியோகம் ;—दार உத்தியோகஸ்தன்
मनसा, स्त्री० விருப்பம் क्रि० மனப்பூர்வமாக
मनसूख़, वि० கை விடப்பட்ட; ரத்து செய்யப்பட்ட
मनसूबा, पु० इरादा எண்ணம்
मनस्वी, वि० புத்திமான்
मनहूस, वि० अशुभ அமங்களமான
मना, वि० தடுக்கப்பட்ட; உசிதமில்லாத;—करना தடுக்க; வேண்டிக்கொள்ள
मनाना, स० கொண்டாட ; கோபத்தைச் சாந்தப் படுத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मनावन, पु० मनाना கோபித்துக் கொண்டவனை ஸந்தோஷப் படுத்துவது
मनाही, स्त्री० निषेध தடை
मनिहार, पु० வளையற்காரன்
मनी, स्त्री० அகங்காரம்; வீர்யம்; மணி
मनुज, पु० மனிதன்
मनुहार, स्त्री० ஸ்துதி; வேண்டுகோள்; மரியாதை
मनोकामना, स्त्री० इच्छा விருப்பம்
मनोगत, वि० மனதிலுள்ள
मनोज्ञ, वि० மனோகரமான
मनोनीत, वि० पसंद பிரியமான; நியமனம் செய்யப்பட்ட
मनोरंजक, वि० மனதிற்குப் பிடித்த
मनोरंजन, पु० मनोविनोद சந்தோஷம்
मनोरथ, पु० விருப்பம்
मनोरम, वि० அழகான
मनोवांछित, वि० इच्छित விரும்பிய
मनोहर, वि० அழகான
मनोहारी, वि० மனதைக் கவரக் கூடிய
मनौती } मन्नत } स्त्री० கடவுளை வேண்டிக் கொள்ளுதல்
मनौव्वल, पु० ஸமாதானப் படுத்துதல்

मन्तक, पु० தர்க்க சாஸ்திரம்
मन्थर, वि० சோம்பேறியான; மந்தமான; மிருதுவான
मन्द, वि० दे० मंद
मन्दुरा, स्त्री० குதிரை லாயம்
ममता, स्त्री० 'தான்' என்னும் எண்ணம்; அன்பு; மோகம்
ममनून, वि० நன்றியுள்ள
मम्रा, पु० நீரோட்டம்; ஊற்று; உற்பத்தி ஸ்தானம்
मयंक, पु० சந்திரன்
मयंद, पु० சிங்கம்
मय, अव्य० கூட; உடன்
मयस्सर, वि० கிடைத்த
मयार, वि० தயாளு
मयूर, पु० मोर மயில்
मरक स्त्री० அழுத்தி சங்கேதம் செய்தல்
मरकज़, पु० केन्द्र நடு இடம்
मरकत, पु० पन्ना மரகதம்
मरघट, पु० மயானம்
मरज़, पु० வியாதி; கெட்ட வழக்கம்
मरजाद } मरजादा } स्त्री० दे० मर्यादा
मरज़ी, स्त्री० इच्छा விருப்பம்; சந்தோஷம்
मरतबा, पु० தடவை; பதவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मरदानगी, स्त्री० ஆண்மை ; துணிவு

मरदाना, वि० புருஷர்களைப் பற்றிய

मरदुम, पु० மனிதன் ;—शुमारी ஜனக் கணக்கு (census)

मरदूद, वि० नीच அற்பமான

मरना, अ० இறக்க

मरभुक्खा, वि० மிக ஏழையான

मरम, पु० दे० मर्म

मरमर, पु० சலவைக்கல்

मरम्मत, स्त्री० மராமத்து ; பழுது பார்த்தல்

मरसिया, पु० இறந்தவரைப் பற்றிய கவிதை

मरहट, पु० மயானம்

मरहम, पु० களிம்பு (மருந்து)

मरहूम, वि० स्वर्गीय காலஞ் சென்ற

मरातिब, पु० பதவி ; வீட்டின் மாடி

मराल, पु० அன்னப் பக்ஷி

मरिच, पु० मिर्च மிளகாய்

मरियल, वि० மிக பலஹீன மான

मरी, स्त्री० 'ப்ளேக்' நோய்

मरीचि, स्त्री० கிரணம்

मरीज़, पु० நோயாளி

मरु, पु० பாலைவனம்

मरुत्, पु० வாயு ; பிராணன்

मरुभूमि स्त्री०, **मरुस्थल** पु० } பாலைவனம்

मरोड़ना, स० முறுக்க

मरोड़ा, पु० வயிற்று வலி

मर्कट, पु० குரங்கு

मर्ग, पु० மரணம்

मर्ज़, पु० நோய்

मर्तबा, पु० தடவை ; பதவி

मर्तबान, पु० ஜாடி

मर्त्यलोक, पु० பூலோகம்

मर्द, पु० மனிதன் ; கணவன் ; தைரியசாலி

मर्दना, स० நசுக்கி அரைக்க

मर्दुमशुमारी स्त्री० ஜனத்தொகை

मर्दुमी, स्त्री० புருஷத் தன்மை

मर्दन, पु० அரைத்தல்; அழித்தல்

मर्म, पु० ரகசியம்

मर्माहत, वि० நன்றாக அடிக் கப்பட்ட

मर्मज्ञ, वि० தத்துவமறிந்த

मर्मभेदी, वि० உள்ளே காய முண்டாக்கும் ; வருத்த முண்டாக்கும்

मर्यादा, स्त्री० மரியாதை ; எல்லை ; நியமம்

मल, पु० அழுக்கு ; மலம்

मलका, स्त्री० பட்டத்து ராணி

मलना, स० தேய்க்க

मलमल, स्त्री० மல்த்துணி

मलमास, पु० அதிமாஸம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मलवाना, स० தேய்க்கச் செய்ய

मलहम, पु० दे० मरहम

मलाई, स्त्री० பால் ஆடை स्त्री० தேய்த்தல்; தேய்ப்புக் கூலி

मलामत, स्त्री० लानत நிந்தனை

मलार, पु० மழைகாலத்தில் பாடும் ஒரு ராகம்

मलाल, पु० துக்கம்; மனத் தளர்ச்சி

मलाह, पु० दे० मल्लाह

मलिंद, पु० भौंरा குளவி; வண்டு

मलिक, पु० ராஜா

मलिन, वि० அழுக்கான; துக்கங் கொண்ட

मलियामेट, वि० நாசம்

मलीदा, पु० மிக்க நேர்த்தியான கம்பளி

मलीन, वि० அழுக்கான; வருத்தமடைந்த

मल्ल, पु० பயில்வான்

मल्लयुद्ध, पु० குஸ்தி

मल्लाह, पु० केवट படகோட்டி

मल्हाना } स० पुचकारना; முத்த
मल्हारना } மிடுவது போல் சப்தம் செய்ய

मवक्किल, पु० கக்ஷிக்காரன்

मवाजिब, पु० குறிப்பிட்ட சமயத்தில் கிடைக்கும் பணம்

मवाद, पु० दे० पीब

मवास, पु० பத்திரமான இடம்; கோட்டை

मवेशी, पु० கால் நடைப் பிராணி

मवेशीख़ाना, पु० மாட்டுக் கொட்டம்

मशक, पु० मच्छड़, கொசு स्त्री० தோலால் செய்த தண்ணீர்ப்பை

मशक्कत, स्त्री० परिश्रम உழைப்பு

मशगूल, वि० ஈடுபட்ட

मशरिक़, पु० கிழக்கு

मशरिक़ी, वि० கீழ்த்திசையின்

मशवरत, स्त्री० ஆலோசனை; சதியாலோசனை

मशविरा, पु० सलाह ஆலோசனை

मशहूर, वि० प्रख्यात பிரசித்தி பெற்ற

मशायरा, पु० मुशायरा கவிகள் மகாநாடு

मशाल, स्त्री० தீவட்டி

मशालची, पु० தீவட்டிக்காரன்

मश्क़, पु० अभ्यास அப்பியாஸம்

मशकूर, वि० நன்றியுள்ள

मश्शाक़, वि० நன்கு பழகிய

मसका, पु० मक्खन வெண்ணெய்

मसकाना, स० துணி கிழிந்து போகும்படி முறுக்க

मसख़रा, पु० விதூஷகன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मसख़री, स्त्री० பரிகாசம்

मसजिद, स्त्री० மசூதி

मसनद, स्त्री० திண்டு

मसरफ़, पु० உபயோகம்

मसरूफ़, वि० செலவழிக்கப் பட்ட; வேலையில் ஈடு பட்ட

मसल, स्त्री० कहावत பழமொழி

मसलन्‌, क्रि० உதாரணமாக

मसलना, स० கசக்க

मसलहत, स्त्री० மறைமுகமான நன்மை

मसला, पु० कहावत பழமொழி

मसविदा पु० दे० मसौदा

मसहरी, स्त्री० கொசு வலை

मसा, पु० பரு; கொசு

मसान, पु० மயானம்

मसाना, पु० மூத்திராசயம்

मसायल, पु० கேள்விகள்

मसालहत, स्त्री० मसालेहत உடன் படிக்கை; சிநேகம்

मसाला, पु० மஸாலாச்சாமான் கள்; உபகரணங்கள்

मसालेदार, वि० மஸாலா உள்ள

मसाहत, स्त्री० பைமாஷ் (நிலத் தை அளத்தல்)

मसि, स्त्री० மை; கண் மை; கருமை

मसीह } पु० ஏசுநாதர்
मसीहा }

मसूड़ा, पु० ஈறு (பல்லின் கீழுள்ள சதை)

मसूर, पु० சிவப்புத் துவரை

मसूरिका, स्त्री० அம்மை

मसूसना } अ० மனதிற்குள் ளேயே துக்கப்பட
मसोसना }

मसौदा, पु० வியாஸத்தின் முதல் குறிப்பு; சட்ட மசோதா

मस्करा, पु० दे० मसख़रा

मस्त, वि० போதையிலிருக் கும்; சந்தோஷமான

मस्तक, पु० தலை

मस्ताना, वि० दे० मस्त

मस्तिष्क, पु० मग़ज़ புத்தி; மூளை

मस्ती, स्त्री० மதம்; போதை

मस्तूरात, स्त्री० स्त्रियाँ ஸ்திரீகள்

मस्तूल, पु० பாய்மரம்

मस्नूई, वि० செயற்கையான

मस्सा, पु० दे० मसा

मंस्ला, पु० दे० मसला

महँगा, वि० கிராக்கியான

महँगी, स्त्री० கிராக்கி; பஞ்சம்

महक, स्त्री० गंध வாசனை; மணம்

महकना, अ० மணக்க

महकमा, पु० இலாக்கா

महकीला, वि० நறுமணமுள்ள

महज़्, वि० வெறும்; क्रि० முற் றிலும்; மட்டும்

महज़्-कैद, स्त्री० வெறுங்காவல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

महज़र, पु० விளம்பரப் பத்திரம்

महत, वि० பெரிய

महताब, स्त्री० நிலா ; पु० சந்திரன்

महताबी, स्त्री० ஒருவித வாணம்; நந்தவனத்தில் அமைந்திருக்கும் உட்காரும் மேடை

महतारी, स्त्री० தாய்

महत्तम, वि० மிகச் சிறந்த

महत्तर, वि० குறிப்பிட்ட இரண்டு வஸ்துக்களில் சிறந்த

महत्त्व, पु० பெருமை ; சிறப்பு

महती, वि० महान மிகப்பெரிய

महत्वाकांक्षी, पु० பெரும் நோக்கமுள்ளவன்

महदूद, वि० எல்லையிடப்பட்ட; சரியான ஏற்பாடு செய்யப்பட்ட

महफ़िल, स्त्री० சங்கீத ஸபை

महफ़ूज़, वि० நன்ருய் ரக்ஷிக்கப்பட்ட

महबूब, वि० அன்பான

महबूबी, स्त्री० அன்பு

महमह, क्रि० நல்ல வாசனையுடன்

महमहाना, अ० வாசனையடிக்க

महरम, पु० அந்தரங்க நண்பன்

महराई, स्त्री० தலைமை

महराब, पु० दे० मेहराब

महरूम, वि० वंचित கிடைக்கப் பெருத

महल, पु० அரண்மனை ; மாளிகை ;—सरा அந்தப்புரம்

महल्ला, पु० பேட்டை

महशर, पु० (முகம்மதிய) நியாயவிசாரணை நாள்

महसूल, पु० வரி ; வாடகை

महसूस, वि० அநுபவ ஞானம் பெற்ற ;—करना மனதில் உணர (to feel)

महा, वि० பெரிய

महाई, स्त्री० கடைதல் ; கடையும் கூலி

महाउत, पु० दे० महावत

महाउर, पु० महावर

महाजन, पु० தனவான் ; ஸாஹுகார் ; செட்டி

महाजनी, स्त्री० வட்டி வியாபாரம்

महाद्वीप, पु० பூகண்டம்

महानिद्रा, स्त्री० மரணம்

महानुभाव, पु० பெரிய மனிதன்

महामाई, स्त्री० பெரியம்மை

महामारी, स्त्री० கொடிய நோய்

महारथी, पु० பெரிய யுத்த வீரன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

महाल, पु० பேட்டை ; பங்கு
महावत, पु० யானைப்பாகன்
महावर, पु० சுமங்கலிகள் காலில் பூசிக்கொள்ளும் ஒருவிதச் சிவப்புச்சாயம்
महाशय, पु० ஐயா ; கனவான்
महि, स्त्री० பூமி
महिला, स्त्री० சீமாட்டி
महिष, पु० எருமைக்கடா
महिषी, स्त्री० ராணி ; பட்டத்து ராணி
मही, स्त्री० பூமி ;—धर மலை
महीन, वि० மெல்லிய
महीना, पु० மாதம் ; மாதச் சம்பளம்
महीप, पु० அரசன்
महुआ, पु० இலுப்பை
महोदय, पु० ஸ்ரீமான்
माँ, स्त्री० தாய்
माँग, स्त्री० கேட்டல் ; தேவை; கிராக்கி ; வகிடு
माँगना, स० கேட்க ; யாசிக்க
माँछ, पु० மீன்
माँजना, स० (பாத்திரம், பல்) துலக்க ; காற்றாடிக் கயிற்றில் மாஞ்சா தடவ अ० அப்பியாஸம் பெற
माँझा, पु० நதியில் இருக்கும் தீவு; காற்றாடிக் கயிற்றில் தடவும் மாஞ்சா
माँझिल, वि० நடுவேயுள்ள
माँझी, पु० केवट படகோட்டி
माँड़, पु० வடி கஞ்சி
माँड़ना, स० பிசைய ; போரடிக்க
मांड़नी, स्त्री० துணிகளின் கரை
माँड़व, पु० கல்யாணப் பந்தல்
मांडा, पु० ஓர் கண் நோய்
माँड़ी, स्त्री० दे० माँड़
माँतना, अ० பைத்தியம் பிடிக்க
माँद, स्त्री० குகை
माँदगी, स्त्री० வியாதி
माँदा, वि० களைத்த ; நோயுள்ள
मांस, पु० மாமிசம்
मांसल, वि० கொழுத்த
माँह, अव्य० में இல்
मा } माइ } स्त्री० தாய்
माइका, पु० दे० मायका
माई, स्त्री० தாய்
माक़ूल, वि० उचित, தகுந்த
माखन, पु० दे० मक्खन
माखी, स्त्री० दे० मक्खी
माचल, वि० பிடிவாதமான
माचा, पु० வயலில் கட்டும் பரண்
माछ, पु० மீன்
माछी, स्त्री० दे० मक्खी
माजरा, पु० हाल விஷயம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

माज़ी, वि० மாஜி ; பழைய
माजून, पु० லேகியம்
माजूफल, पु० மாச்சக்காய்
माट, पु० மண் சால்
माटी, स्त्री० दे० मिट्टी
मातंग, पु० हाथी யானை
मात, स्त्री० पराजय தோல்வி वि० தோற்ற; மதங்கொண்ட; —करना தோற்கடிக்க; மிஞ்சி விட
मातदिल, वि० நடுத்தரமான குணமுள்ள ; நடுத்தர மான சூடுள்ள
मातना, अ० மதம் பிடிக்க
मातबर, वि० நம்பக் கூடிய
मातम, पु० இறந்த வீட்டில் துக்கம் கொண்டாடுதல்
मातमपुर्सी, स्त्री० துக்கம் விசாரித்தல்
मातमी, वि० துக்கம் காட்டுகிற
मातहत, वि० ஒருவர் கீழ் உத்தியோகம் செய்யும்
माता, स्त्री० தாயார் ;—छापना அம்மை ஊசி குத்த (vaccinate)
मातामह, पु० नाना தாயாரின் தகப்பன்
मातुल, पु० மாமா
मातृका, स्त्री० தாதி ; தாய்

मात्र, अव्य० सिर्फ़ மாத்திரம்
मात्रा, स्त्री० பரிமாணம்; அளவு
मात्सर्य, पु० பொறாமை
माथ, पु० दे० माथा
माथा, पु० நெற்றி;—पच्ची கஷ்டப்படுத்துதல் ;—पटकना, அதட்டித் தடுத்தல் ; அதட்டி அறிவுறுத்தல் ; —रगडना, தாழ்மையுடன் பரிந்து கேட்டல்
माथे, वि० ஒருவர் பொறுப்பிலுள்ள ;—चढ़ना, அடக்கியாள ;—चढ़ाना மரியாதையுடன் ஏற்றுக் கொள்ள
मादक, वि० போதையுண்டாக்கும்
मादर, स्त्री० தாய்
मादरी, वि० தாயைச் சேர்ந்த —ज़बान தாய்ப் பாஷை
मादा, स्त्री० தாய் ஜந்து
माद्दा, पु० மூல தத்துவம் ; தகுதி
माधुरी, स्त्री० இனிமை; சோபை
मान, पु० அளவு ; மானம் ; கீர்த்தி ; ஊடல் ;—रखना கவுரத்தைக் காப்பாற்றுதல் ;—करना மதிப்பது ; ஊடுவது
मानचित्र, पु० தேசப்படம்
मानता, स्त्री० दे० मन्नत

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मानना, स० ஒப்புக் கொள்ள ; அனுமானிக்க ; கடவுளை வேண்டிக் கொள்ள ; மரியாதிக்க

माननीय, वि० பூஜிக்கத்தக்க ; கனம் பொருந்திய

मान-मंदिर, पु० வானிலை ஆராய்ச்சி நிலையம்

मान-मनौती, स्त्री० दे० मन्नत

मानव, पु० மனிதன்

मानस, पु० மனம் ; மானஸரோவர் ஏரி वि० மனதில் தோன்றிய

मानसर } पु० மானஸரோ
मानसरोवर } வர் ஏரி

मानसशास्त्र, पु० மனோ விஞ்ஞானம்

मानसिक, वि० மனதில் உற்பத்தியான ; மனச்சம்பந்தமான

मानिंद, वि० போல ; சமானமான

मानिक, पु० மாணிக்கம் ;—रेत, மெருகுத்தூள்

मानी, वि० சுயமரியாதையுள்ள ; மதிக்கப்பட்ட स्त्री० அர்த்தம்

मानुषिक, वि० மனிதனைச் சேர்ந்த

माने, पु० அர்த்தம் ; கருத்து

मानो, अव्य० दे० जैसे

मान्य, वि० மதிக்கத் தகுந்த

माप, स्त्री० அளவு ; அளத்தல்

मापक, पु० அளப்பவன் ; அளக்கும் கருவி

मापना, स० அளக்க

माफ़, वि० மன்னிக்கப்பட்ட

माफ़कत, स्त्री० मेल பொருத்தம் ; அநுகூலம்

माफ़िक, वि० போல ; அனுசரணையாக

माफ़ी, स्त्री० क्षमा மன்னிப்பு

माफ़ी-दार, पु० இனும் (வரியில்லாத) நிலம் பெற்றவன்

मामता, स्त्री० ममता

मामलत } स्त्री० मामला வியவ
मामलति } காரம்

मामला पु० சச்சரவு; வழக்கு ; விஷயம்

मामूर, वि० நிறைந்த ; நியமிக்கப்பட்ட

मामूली, वि० சாதாரணமான; வழக்கப்படியான

मायका, पु० பிறந்தகம்

मायल, वि० வளைந்த; ஈடுபட்ட

मायाविनी, स्त्री० வஞ்சகக்காரி

मायावी, पु० தந்திரசாலி ; மந்திரவாதி

मायूब, वि० குற்றமுள்ள ; கெட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मायूस, वि० நம்பிக்கையிழந்த

मायूसी, स्त्री० மனத் தளர்ச்சி

मार, स्त्री० அடித்தல் पु० காம தேவன் ; விஷம் ; ஊமத் தை

मारक, वि० கொல்லுகிற

मारका, पु० அடையாளம் ; யுத்தம் ; மிகப் பெரிய சம்பவம்

मारके का, वि० महत्त्वपूर्ण மிகச் சிறந்த

मारकाट, स्त्री० சண்டை

मारकीन, पु० ஒருவித முரட்டுத் துணி; கோராத் துணி

मारग, पु० दे० मार्ग

मारण, पु० கொல்லுதல்

मारतौल, पु० கருமானின் சம் மட்டி

मारना, स० கொல்ல ; குஸ்தி யில் தோற்கடிக்க; உலோ கத்தின் பஸ்மம் தயாரிக்க

मारपेच, पु० வஞ்சனை ; துஷ் டத்தனம்

मारफ़त, अव्य० ज़रिये மூலமாய்

मारामार, क्रि० வெகு சீக்கிரம்; पु० கைகலப்பு யுத்தம்

मारा मारा फिरना, உத்தேச மில்லாமல் அலைய

मारुत, पु० पवन காற்று

मारू, पु० யுத்த காலத்தில் பாடப்படும் ராகம்

मारे, अव्य० वजह से காரண மாய்

मार्ग, पु० வழி

मार्गशीर्ष, पु० மார்கழி மாதம்

मार्गी, पु० வழிப் போக்கன்

मार्जन, पु० सफ़ाई சுத்தம் ;

मार्जनी, स्त्री० துடப்பக்கட்டை

मार्जार, पु० பூனை

मार्जित, वि० சுத்தம் செய்யப் பட்ட

मार्तंड, पु० சூரியன்

मार्फ़त, अव्य० ज़रिये வழியாய் ; மூலமாய்

मार्मिक, वि० மனதில் படும்படி யான

माल, पु० செல்வம்; பொருள்; சாமான் स्त्री० மாலே ; தறி யின் மால்க் கயிறு

मालकियत, स्त्री० எஜமானத்து வம்

मालख़ाना, पु० மளிகை; மண்டி

मालगाड़ी, स्त्री० 'கூட்ஸ்' வண்டி

मालगुज़ार, पु० நிலவரி கொடுப் பவன்

मालगुज़ारी, स्त्री० நிலவரி

माल-गोदाम, पु० கூட்ஸ் ஷெட் (goods-shed)

मालदार, वि० பணக்கார

मालपूआ, पु० பூரி போன்ற ஒரு இனிப்பு பக்ஷணம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

माला, स्त्री० மாலை

मालामाल, वि० அதிக ஐசுவரிய முள்ள

मालिक, पु० எஜமானன்; கணவன் ; கடவுள்

मालिका, स्त्री० வரிசை ; மாலை

मालिकाना, पु० எஜமானனின் உரிமை ; நிலச் சொத்து ; वि० எஜமான உரிமையுள்ள

मालिकिन स्त्री० எஜமானி

मालिकी, स्त्री० பாத்யதை ; உரிமை

मालिन्य, पु० அழுக்கு

मालियत, स्त्री० விலை; விலை உயர்ந்த சாமான் ; சம்பத்து

मालिश, स्त्री० தேய்த்தல் (massage)

माली, पु० தோட்டக்காரன் वि० பொருளாதார;—हालत பொருளாதார நிலைமை

मालिदा, पु० दे० मलीदा

मालूम, वि० தெரிந்த ;—होना தெரிய ;—करना தெரிந்து கொள்ள

मालेमुफ़्त, पु० இலவச சொத்து

माशा, पु० எட்டு குந்துமணி எடை

माशा अल्लाह, अव्य० கடவுள் காப்பாற்றட்டும் !

माशूक, वि० காதலிக்கப்பட்ட

माशूकाना, वि० காதலர் போன்ற

माशूकी, स्त्री० காதலித்தல் ; அழகு

मास, पु० மாதம்

मासना, स० சந்திக்கச் செய்ய

मासिक, वि० மாதமொருமுறை நடக்கும்

मासी, स्त्री० मौसी தாயாரின் சகோதரி

मासूम, वि० குற்றமற்ற; ஒன்று மறியாத

माह, अव्य० में இல் ; நடுவில்

माह, पु० மாதம் ; சந்திரன்

माहताब, पु० சந்திரன்

माहर, वि० நன்ருய் அறிந்த

माहरू, वि० சந்திரனைப் போன்ற ; அழகிய

माहवार, क्रि० மாதாமாதம்

माहवारी, वि० ஒவ்வொரு மாதத்து

माँहि, अव्य० में உள்ளே

माहिर, वि० அறிவாளியான

माही, स्त्री० மீன் ;—गीर செம்படவன்

माहुर, पु० விஷம்

मिंडाई, स्त्री० அரைத்தல் ;அரைக்கும் கூலி

मिक़्दार, स्त्री० परिमाण அளவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मिचकना, अ० கண் மூடி மூடித் திறக்க
मिचना, अ० கண் மூட
मिचलाना, अ० வாந்தி வர
मिज़गाँ, स्त्री० கண்ணிமைகள்
मिज़राब, स्त्री० வீணை வாசிப்பவர் விரலில் அணியும் கம்பி
मिज़ाज, पु० இயற்கை குணம்; சுபாவம்; மனது; கர்வம்;—पुरसी க்ஷேமம் விசாரித்தல்;—खराब होना, மனது செல்லாமல் அசௌக்ய முற;—पाना ஒருவர் ஸ்வபாவத்தைக் கண்டறிய
मिज़ाजदार, वि० கர்வமுள்ள
मिज़ाज शरीफ़, अव्य० தாங்கள் க்ஷேமந்தானே
मिज़ाज़ी, वि० கர்வமுள்ள
मिटना, अ० அழிய
मिटाना, स० அழிக்க
मिट्टी, स्त्री० பூமி; மண்; பிணம்;—का तेल மண்ணெண்ணெய்;—पलीद होना நிலைமை கெட;—ठिकाने लगाना புதைக்க;—डालना மறைக்க;—में मिलाना நாசமாக்க
मिटिया, स्त्री० சிறிய மண் கலயம்
मिटिया, स० மண் தேய்த்து சுத்தம் செய்ய
मिट्ठी, स्त्री० முத்தம்
मिट्ठू, पु० இனிமையாய்ப் பேசுகிறவன்
मिठबोला, पु० இனிமையாய்ப் பேசுபவன்
मिठलोना, पु० சொற்ப உப்புள்ள
मिठाई, स्त्री० இனிப்பு; மிட்டாய்; இனிய பண்டம்
मिठास, स्त्री० இனிப்பு
मित, वि० மிதமான
मितभाषी, पु० மிதமாய்ப் பேசுபவன்
मितव्यय, पु० மிதமாய்ச் செலவு செய்தல்
मितव्ययता, स्त्री० செட்டுத்தனம்
मितव्ययी, पु० செட்டாய் இருப்பவன்
मिताई, स्त्री० मित्रता
मिति, पु० காலவரை; எல்லை; அளவு स्त्री० திதி அல்லது தேதி; நாள்;—पूजना செலுத்த வேண்டிய தேதிவர
मित्र, पु० சிநேகிதன்; சூரியன்
मित्रता, स्त्री० சிநேகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मिथ्या, वि० பொய்யான
मिनक़ार, पु० அலகு ; தமுர்
मिन-जुमला, क्रि० எல்லாம் சேர்ந்து ; மொத்தமாக
मिनती, स्त्री० **विनती** விண்ணப்பம்
मिनहा, वि० குறைக்கப்பட்ட தொகை
मिन्नत, स्त्री० வேண்டுகோள்
मिमियाना, अ० ஆடு கத்த
मियाँ, पु० முஸல்மான் ; கணவன் ; ஸ்ரீமான்
मियाँमिट्ठू, पु० இனிமையாய்ப் பேசுபவன் ; முட்டாள் ; கிளி
मियान, स्त्री० दे० **म्यान**
मियाना, पु० ஒரு வகைப் பல்லாக்கு
मिरगी, स्त्री० வலிப்பு நோய்
मिरचा, पु० மிளகாய்
मिरज़ई, स्त्री० ஒரு வகை பனியன்
मिरज़ा, पु० **अमीर का बेटा** ஒரு பட்டம்
मिर्च, स्त्री० மிளகு ; மிளகாய் ; लाल—மிளகாய் வற்றல் ; हरा—பச்சை மிளகாய்
मिलन, पु० சந்திப்பு ;—सार நன்ருய்ப் பழகும் சுவபாவமுள்ள
मिलना, स० சந்திக்க ; கிடைக்க
मिलान, पु० ஒப்பிடுதல்
मिलाना, स० சேர்க்க ; அறிமுகப்படுத்த ; ஒப்பிட
मिलाप, पु० சந்திப்பு
मिलावट, स्त्री० கலப்பு;சேர்க்கை
मिलित, वि० சேர்ந்த ; கலந்த
मिलौनी, स्त्री० கலப்படம்
मिल्कियत, स्त्री० சொத்து
मिल्लत, स्त्री० நெருங்கிய சிநேகம் ; ஒற்றுமை
मिश्र, पु० எகிப்து தேசம்
मिश्रण, पु० கலப்பு
मिश्रित, वि० கலந்த
मिश्री, स्त्री० கற்கண்டு
मिष, पु० கபடம் ; சாக்குப்போக்கு
मिष्ट, वि० தித்திப்பான ; **—भाषी** இனிமையாய்ப் பேசுபவன்
मिष्टान्न, पु० மிட்டாய் ; இனிப்புப் பண்டம்
मिस, पु० दे० **मिष**
मिसकीन, वि० **बेचारा** எளிய
मिसरा, पु० உருதுப் பாட்டில் ஒரு அடி
मिसरानी, स्त्री० சமையற்காரி
मिसरी, स्त्री० கற்கண்டு
मिसाल, स्त्री० உபமானம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

मिसिल, स्त्री० வியவஹாரப் பத்திரங்கள்

मिस्तर, पु० மாச் சுத்தியல்; கொட்டாப்புளி; தோட்டி

मिस्तरी, पु० மேஸ்திரி

मिस्मार, वि० உடைக்கப்பட்ட; இடிக்கப்பட்ட

मिस्र, पु० எகிப்து தேசம்

मिस्री, स्त्री० दे० मिसरी

मिस्ल, वि० போல; சமானமான

